www.tamilarangam.net

## 'தாயகம்' பத்திரிகையில் தனது கருத்தை முன்வைத்த ஜீவா என்ற எழுத்தாளருக்கான மரண அச்சுறுத்தல்

« சிங்களப் பேரினவாத அரசியல் தலைவர்களுக்கு எந்தவிதத்திலும் குறையாதவராக, சிங்களப் பேரினவாதிகள் எமது போராட்டத்துக்கு எதிராக எப்படி கொச்சைத்தனமாக நடந்து கொண்டார்களோ, அதேபோல் தவறான தகவல்களைக் கொடுத்து, 'அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமிழ் மக்களே பொறுப்பு. அவர்களே குற்றவாளிகள்' எனத் தீர்ப்பளித்துள்ளார். இவர் போன்றவர்கள் அடிக்கடி மின்சாரக் கம்பங்களை நினைவூட்டி நிற்கின்றனர்.»

*(த.இ.பே.தலைவர்.புஸ்பராஜா)*





*« வல்வெட்டித்துறை மக்களிடமுள்ள விடுதலைப் போராட்டம் மீதான ஆர்வத்தை யாரும் சந்தேகிக்க முடியாது. விடுதலைக்காகத் தங்களையே அழித்துக் கொண்ட மக்கள். அவர்களது வாழ்க்கையே போர்மயமான வாழ்க்கைதான். ஆண்டாண்டு காலமாக அரச படைகளுடன் மோதியே அவர்கள் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். வல்வெட்டித்துறை என்றால் மாத்தறையில் வாழும் சிங்களவருக்கே தேள் கொட்டின மாதிரி. » (த.இ.பே.தலைவர் புஸ்பராஜா)*

# சிதைத்தலுக்கான-சாட்....

www.tamilarangam.net



# பிரபல்யத்திற்கான...632 பக்கங்கள்!!!




« வரலாறு எழுதுபவர்கள் தமது சமகால-சாதகமான பொது அபிப்பிராயங்களையும் கவனத்திற் கொண்டு, கடந்தகால புறநிகழ்வுக் காரணிகளின் முக்கியத்துவங்களையும் நிராகரித்து, தமது அகம்சார் விருப்பத்தையே வரலாறாக முன்னிறுத்துகிறார்கள். »

[redacted]

---

பல்வேறு இனங்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கொலைகளாகட்டும், பல்வேறு எதிர் குரல்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அழிவுகளாகட்டும், பல்வேறு நாடுகளிலுள்ள அப்பாவி மக்களுக்கு நிகழும் தொடர் அவலங்களாகட்டும்... இவ்வாறான அனர்த்தங்களுக்கு மூல காரணமானவர்களையே மறந்து, மன்னித்து விடுவதோடல்லாது; அவர்களே வரலாற்று நாயகர்களாகவும் நிலைத்து விடுகின்றனர். இவர்களுக்கான பாதுகாப்பும், சாதகமாகவும் உள்ள 'நிலைக்களம்' ஆனது; காரிய உறவும், பிரபல்யத்திற்கான மோகமும் ஆகும்.

'மறுத்தோடியவர்களுக்காய் கவி பாடியவரும், அராஜகங்களுக்கு எதிராகவென முழக்கமிட்டவர்களும் ஒன்று கூடி தமது காரிய உறவையும், பிரபல்யங்களையும் கவனத்தில் இருத்தி, திரு.புஸ்பராஜா அவர்களின் «பிரபல்யத்திற்கான...632 பக்கங்களிற்கு» (ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்) வரலாற்று அங்கீகாரச் சான்றிதழ் வழங்கிய நிகழ்வு பற்றிப் பேசுவதோடு, திரு. புஸ்பராஜா அவர்களுடன் இணைந்து 1985 இல் இருந்து கட்சிப் பணிகளில் பங்கு பற்றிய அனுபவத்தினூடக, அவரது ஜனநாயகம் மீதான அக்கறையையும், அவர் மாற்றுக் கருத்துகள் மீது காட்டும் அரசியல் நியாயங்களையும் பகிர்ந்துகொள்வதற்கு முன்பாக; இக்கட்டுரைக்கு தொடர்புடைய ஓர் விடயத்தையும் இணைத்துக் கொள்ள வேண்டிய அவலநிலை...

பிரான்சில் இருந்து வெளிவரும் 'எக்ஸில்' சஞ்சிகையின் 12வது இதழை தனது ஆலோசனைக்குட்பட்டு இயங்கும் புத்தகசாலை

www.tamilarangam.net



ஒன்றில் 'எக்ஸில்' சஞ்சிகையை விற்ககூடாதென தடை செய்த புஸ்பராஜா அவர்களின் ஜனநாயகப்பண்பை பலர் அறிந்த செய்தி.

எமது கலகத் தோழர்களான சோபாசக்தி, சுகனினது தொகுப்பான «கறுப்பு» எனும் நூலில் புஸ்பராஜா வின் இரண்டு ஆக்கங்கள் வெளிவந்திருந்தது. எனவே «கறுப்பு» வெளியீட்டு விழாவில் புஸ்பராஜா வின் இரண்டு ஆக்கங்களையும் அவரின் எக்ஸில் தடைக்கான எதிர்ப்பாக கிழித்தெறிவோம் எனும் அபிப்பிராயத்திற்கு கலகத்தோழர் சோபாசக்தி தான் ஒரு வெள்ளாளனாக இருக்கும்வரை புஸ்பராஜாவின் ஒரு மசிரையும் தன்னால் புடுங்க முடியாதென்பதாக ஒரு நியாயத்தைக்கூறி எமது அம்முயற்சிக்கு தடையாக இருந்ததோடு «கறுப்பு» வெளியீடும் தவிர்க்கப்பட்டது.

பின்பு அவரே கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்திற்கு பவள விழா நடக்க இருப்பதாகவும் அந்நிகழ்வன்று துரோகி என கொலை செய்யப்பட்ட யாழ்மேயர் துரையப்பாவிற்கு விழா எடுக்கவேணும் எனத்தெரிவித்து. அம்முயற்சி கைகூடாது போக, பவள விழா நெருங்கும் சமயம் அமிர்தலிங்கமும் அவர்சார்ந்த த.வி.கூட்டணியின் அரசியலுமே இன்றைய தமிழ்த் தேசியத்தின் பெயரில் நடைபெறும் அராஜக ஆதிக்கத்திற்கும், துரோகிகளின் (மேயர்.துரையப்பா) பட்டியல் தயாரிப்பிற்கும் முன்னுதாரணமானவாகள் என்பதோடு, இவர்கள் பேசும் தமிழ்த் தேசிய அரசியலானது ஒடுக்கப்படும் தலித் சமூகங்களுக்கு எதிரானவை எனும் கருத்தியலைக் கொண்ட, ஒரு துண்டுப்பிரசுரமாவது விட்டாகணும் எனும் ஸ்டாலினின் (எக்ஸில்) அபிப்பிராயத்திற்கு உடன்பட்டு. துண்டுப்பிரசுரம் தயாராகி விநியோகிப்பதற்கு முதல் நாள் தனக்கு இதில் உடன்பாடில்லை எனவும் இந்நடவடிக்கையானது புலிகளுக்குத்தான் சாதகமாகிவிடும்; இதனால் பல ஜனநாயக சக்திகளை நாம் இழக்கவும் நேரிடும் எனக்கூறி பலஜனநாயக சக்திகளின் நம்பிக்கைக்குரியவரானார். பின்பு நானும், விஜியும், ஸ்டாலினுமே கூட்டணித்தலைவர் அமிர்தலிங்கத்தின் பவள விழாவிற்கான எமது விமர்சனத்தை பிரான்சில் நடைபெற்ற அமிர்தலிங்கத்திற்கான பவள விழா நிகழ்வில் துண்டுப்பிரசுரத்தின் மூலமாக தெரிவித்தோம்.

சுகன் தான் ஒரு தலித் என்பதாக «புதியதடம்» எனும் சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் கூறியது மிகப்பெரிய தவறாக சோபசக்தியால் கூறப்பட்டது சுகன்மீதான அடையாளத்தை பிறர் எவ்வகையில் காண்பினும் சுகனால் தலித்துக்களின் சமூகவேதனையுடன் தன்னை ஒரு தலித்தாக அடையாளப் படுத்துவதனூடாக அவர்களுக்கான நியாயமான போராட்டங்களை நேர்மையாக நடத்தமுடியுமென நான் நம்புகிறேன். மாறாக சோபாசக்திபோல் நான் ஒரு வெள்ளாளனாக இருக்கிறேன்; என்னை எல்லோரும் வெள்ளாளனாகவே பார்க்கிறார்கள் எனும் அவரின் தொடர்வாதமானது தன்னை உணர்வுபூர்வமாகவும், சிந்தனைபூர்வமாகவும் வெள்ளாளனாக தக்கவைத்துக் கொண்டு தலித்சமூக அக்கறை (!!!) பற்றிப்பேசுவது....!. தலித்சமூகம்மீது அக்கறைகொண்டு உலாவும்போது வெள்ளாளச் சூத்திர முடிச்சை அகம்நீக்கி- தகர்ப்பது எப்படி?

இன்று நாம் உலகமயமாதலும், அதன் வர்த்தக உபாயங்கள் பற்றியும்



அறிந்தவர்களாகவும், அதனது, பாதகச் சூழலை விவாதத்திற் குட்படுத்திவரும் வேளையிலே; சஞ்சிகைகள் நூல்கள் பத்திரிகைகள்போன்ற மக்கள் தொடர்புச்சாதனங்களையும் சந்தைப்படுத்துவதற்கான வர்த்தக உலகமயமாதலின் லெவலுக்கு இணையாக தமிழ் ஈழவிடுதலைப் பேரவையின் முதலும்...!!! மூத்த தலைவருமான சி.புஸ்பராஜா அவர்கள் «ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்» எனும் நூலை வெளியிடுவதன் மூல மாக; புத்தக விற்பனையிலும் எமக்கு முதலும் மூத்தவருமாகி ஓர் வரலாற்று முன்னோடியாக நெஞ்சில் நிறைந்துவிட்டார். எமது தமிழ் மக்களின் கலாச்சாரச் சடங்குகளுக்கான பிரதான காரணமாக விளங்கும் 'என்பலப்' வாங்கும் சடங்கை மேற்கொள்ளும் பாணியிலான அழைப்பிதழி னூடாக, தனது உற்றார், உறவினர், நண்பர்களை அழைத்து (எனது ஈழ விடுதலைப்போராட்டத்தின் பங்களிப்பையும், அனுபவங்களையும் தாங்கிய நூலொன்றை வெளியிட இருப்பதால் குடும்பத்துடன் இவ் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (அழைக்கும் நபர்களின் பெயர்கள் தனது நூலில் இடம்பெற்றிருந்தால் அவர்களை வரவழைக்கும் உத்தியாக) உங்கள் பெயரும் நான் வெளியிடும் நூலில் இடம் பெற்றிருக்கிறது. எனும் பிரத்தியேக இணைப்புடனும் அழைக்கப் பட்டிருக்கிறது.) அவ்விழாவை கோலாகலமாக நிறைவேற்றிச் சாதனை படைத்துவிட்டார்.

மேற்படி சடங்கில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தியவர்களில் உமாகாந்தனே தனது உரையினூடாக நியாயமான வழிமுறையை மேற்கொண்டார். காரணம் வெளியீட்டிற்குள்ளான «ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்» எனும் நூலைக்காணாமலும், அந்நூலின் உள்ளடக்கம் ஏதென அறியாதபோதிலும் ஒரு நூலொன்றை வெளியிட்ட தென்பதற்காகவேனும் (அதனுள் என்ன கஞ்சல் குப்பை கிடந்தாலும்) அதன் ஆசிரியரையும் அவரது நூலையும் பாராட்டியே ஆகணும் என்பதாக ஏனையோர் அனைவரும் உரைநிகழ்த்தி; வரலாற்றில் தொலைந்து போகா நினைவொன்றை நிகழ்த்திப்போயினர். இவர்களிடையே, தொலைதூரக் குளிர்தேசத்தில் இருந்து வருகைதந்தவரான எமது எதிர்கால தேசியக்கவிஞர் சேரன், இவர் மேற்படி நூலின் பல பகுதிகளை கற்றதன் விளைவாக; நினைந்தழுது, நினைவுறுத்தி, நினை வழித்து, நினைவு மறுத்து... எனும் தாள நயங்களுடன் உரைபாடி புஸ்பராஜாவின் தலையையும், முதுகையும் தடவிச்சென்றார்.

மனிதனின் கடந்துவந்த வாழ்வில், அவனது சுய பாத்திரமானது, புறச் சூழலின் தாக்கங்களிலிருந்து மிகச் சிறிய பங்காகவே நிகழ்ந்து வருகிறதென்பதே உண்மை. இவ்வுண்மையை வெளிப்படுத்தும் சாதனங்களில் இலக்கியமானது முதன்மை வகிக்கிறபோதிலும், இலக்கியவாதிகளென தம்மை அடையாளப்படுத்தி வரலாறு எழுதுபவர்கள் தமது சமகால- சாதகமான பொது அபிப்பிராயங்களையும் கவனத்திற் கொண்டு, கடந்த கால புறநிகழ்வுக்காரணிகளின் முக்கியத்துவங்களையும் நிராகரித்து, தமது சமகால- அகம்சார்- விருப்பத்தையே வரலாறாக முன்னிறுத்துகிறார்கள். இதன் தொடர்ச்சியாகவே ஈழப்போராட்டத்தின் மூத்த இளைஞர்- முன்னணித்

www.tamilarangam.net



தலைவரான புஸ்பராஜாவின் « ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம் » எனும் வரலாற்றுக் குப்பையும்.

புஸ்பராஜா அவர்கள் தனது புனிதநூலான «ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்» என்பதன் ஊடாகக் கிறிக்கி முடித்திருப்பதானது, தமிழ் மக்களின் விடுதலைக்காக் குரல் கொடுத்தோர் அனைவருமே குற்றவாளிகள் அதற்கு நான் 'சாட்சி' என. ஆனால் மிதவாதிகளின் அரசியலையும், அவ் அரசியலையே தீவிரவாதத்தினால் (ஆயுதத்துடன்) மேற்கொள்ளப்பட்டதைப் பற்றியும் அக்கறையில்லாத இவரது நூலைக் கொஞ்சம் குலைத்துக்காட்ட விரும்புகிறேன்.

தனது முன்னுரையில்(ப:13) «நாம் தமிழ்ஈழ விடுதலை இயக்கமாகச் செயற்பட்டபோது தங்களுக்கு சரியானதொரு தலைமை கிட்டப்போகிறது என மக்கள் நம்பினர் (அதாவது தனது தலைமையில். நான் தான் தமிழ்ஈழ விடுதலை இயக்கத்திற்கு தலைவனாக இருந்தனான் என்பதை வாசகர்களுக்கு நினைவுறுத்தப்படுகிறது. பிரபாகரன் என்ன சுண்டக்காய் எனும் இறுமாப்பில்) இப்படி தன்னை நம்பி இருந்த மக்கள் என்மீது கோபமாக இருக்கின்றனர் அந்த மக்கள் என்மீது கற்களை வீசட்டும்» என்கிறார். ஆனால் நான்கூறுவேன் நீங்கள் மலர் தூவி வணங்கப்படவேண்டியவர் புஸ்பராஜா. பிரபாகரனை விட மிக மோசமான தலைமையில் நாங்கள் சிக்கிக் கொள்ளாததையிட்டு. எழுத்துச் சுதந்திரம் விமர்சன சுதந்திரம் பேணப்பட வேண்டும் எனவும், அனைத்து அராஜகப் பிரயோகங்களுக்கும் எதிரானவன் நான் என்பதான 'லேபிலையும்' ஒட்டிக்கொண்டு, பிரான்சில் 1999இல் அராஜகத்திற்கு பலியாகிப் போன சபாலிங்கத்திற்கு சமர்ப்பணமாக «தோற்றுத்தான் போவோமா...» எனும் தொகுப்பு நூலொன்றையும் வெளியிட்டுள்ளார் திரு.புஸ்பராஜா என்பதும் அனைவரும் அறியப்பட வேண்டியதொன்று.

«தாயகம்» பத்திரிகையில் 1991 ஏப்பிரல் 26இல் ஜீவா என்பவர் எழுதிய தமிழாராய்ச்சி மாநாட்டு அனர்த்தங்கள் பற்றிய செய்திகள் தவறானது எனவும், அதற்கான காரணம் குறித்தும் தான் எழுதுவதோடு; இதற்காக ஜீவாவை என்ன செய்தால் தகும் என்பதான புஸ்பராஜாவின் பாணி... «சிங்கள பேரினவாத அரசியல் தலைவர்களுக்கு எவ்விதத்திலும் குறையாதவராக, சிங்களப் பேரினவாதிகள் எமது போராட்டத்திற்கு எதிராக எப்படி கொச்சைத்தனமாக நடந்து கொண்டார்களோ, அதே போல் தவறான தகவல்களைக் கொடுத்து அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமிழ் மக்களே பொறுப்பு, அவர்களே குற்றவாளிகள் என தீர்ப்பளித்துள்ளார். <u>இவர் போன்றவர்கள் மின்சாரக் கம்பங்களை நினைவூட்டி நிற்கின்றனர்.» (ப.108-109)</u> (அடிக்கோடு என்னாலானது)

சிங்களவர்களோ, சிங்கள அரசியல் வாதிகளோ எமது போராட்டத்தை கொச்சைப்படுத்தினாலும் தமிழர்களாகிய நாம் எமது போராட்டத்தையோ அதை முன்னெடுப்பவர்களையோ கொச்சைப்படுத்தியோ விமர்சித்தோ எழுதக்கூடாதென்பதோடு எமது போராட்டத்திற்கு எதிராக எழுதுவதற்கான புஸ்பராஜாவின் தண்டனையும் 'மின்சாரக் கம்பம்'. முதல் துரோகிப்பட்டியல் (மேயர் துரையப்பா) தயார்செய்த தலைவர் அமிர்தலிங்கத்தின்



வாரிசல்லவா எங்கள் தமிழ் இளைஞர் பேரவையின் தலைவர் புஸ்பராஜா.

இவரது « பிரபல்யத்திற்கான...632பக்கங்களிற்கு » சாமரம் வீசிய பிரமுகர்கள், புஸ்பராஜாவின் «தோற்றுத்தான் போவோமா...» எனும் தொகுப்பில் மாற்றுக் கருத்துகளுக்கு ஆதரவான தமது பதிவுகளின் பயன்பாட்டுத் தன்மையையும், புஸ்பராஜா 'தாயகம்' பத்திரிகையில் தனது விமர்சனத்தை வைத்த ஜீவனுக்கான மிரட்டலையும் எவ்விதமான புனிதப்பாதையில், வர்க்கப்பார்வையில் இணைக்கப்போகிறீர்கள்.

«...மறுத்தோடி அரசியலையும் வெளிப்படையாக முன்வைப்பவர்களும்,
அக்கருத்துகளுக்குக் களமாக அமைகிற சிறுசஞ்சிகைகளும் எமது
கௌரவத்துக்கு உரியன. ஒரு சபாலிங்கத்தை, ஒரு ராஜினியை, ஒரு
செல்வியை மறுத்தோடிகளாக உயர்த்தி நிற்பது இத்தகையதொரு
வெளிப்படையான மாற்றுக்கருத்து
அரசியல்தான். இந்த அரசியலின் ஆபத்து என்னவென்றால், இந்த
அரசியலை எதிர்ப்பவர்கள் ஆயுததாரிகளாகவும், தமது
புனிதப்பாதையில் குறுக்கிடும்
எவரையும் எவ்வித தயக்கமற்றுக்கொன்றொழிக்கக்கூடிய சித்தம்
படைத்தவர்களாக இருப்பதும்தான்...»

<u>சேரன்</u> « தோற்றுத்தான் போவோமா »

«...ஒவ்வொரு கொலையின் உயிர் அழிப்புக்கு முன்னாலும், பின்னாலும்
கொலையாளிகளின் மதிநுட்பமான செயற்பாடு உயிர்பறித்தலுக்காகத்
தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதன் மீதான குற்றச் சாட்டுகளை,
வதந்திகளை, பொய்மைகளை தங்களின் வர்க்கநலன்களுக்கேற்ப
சமூக மக்கள் திரள்மீது பக்குவமாய் மூளைச்சலவை செய்வதும்,
அவர்களின் மனோநிலையை உளவியலை இக்கொலையின் சார்பு
நிலைக்குத் தள்ளுவதும்தான்...»

<u>அசோக்</u> « தோற்றுத்தான் போவோமா...»

தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் புஸ்பராஜா, தமிழர் விடுதலைக்கூட்டணியின் அதுவும் குறிப்பாக அமிர்தலிங்கத்தின் இரசிகராக இருந்தவர், இப்போதும் இருப்பவர். கூட்டணியினர் பங்கு கொண்ட சத்தியாக்கிரகம், மறியல் போராட்டங்களில் அவர்கள் பொலிசாரால் தாக்கப்படுபவைகளை புகைப்படங்களில் கண்டு ஆச்சரியமும், நம்பமுடியாத உணர்வும் ஏற்பட்டதாகவும்,எழுத்தைவிட உண்மை நிகழ்விற்கு புகைப்படமே பிரதானமான காரணம் என்பதைத் தான் நம்புவதாகவும் கூறுகிறார். இவைகளைக்கண்டு புல்லரித்துத்தான் செல்வநாயகத்திற்கு தனது தசையைக் கிழித்து இரத்தத்திலகமும் இட்டவர்.(ப:44). இவர் தனது ஈழவிடுதலைப்போராட்ட வரலாற்றில் செய்த ஒரே ஒருதவறும், அதனை நினைத்து ஒரே ஒரு வெட்கமும் கொள்வது (ப:231) சிங்கள மக்களுக்கு எதிராகப் பேசி, துவேஷம் காட்டி நடந்து கொண்டதற்காக மட்டுமே. வன்முறை கவர்ச்சியுடனான ஈடுபாடே இரத்தத்திலகம். அதற்கான வருத்தமுமில்லை, வெட்கமும் இல்லை இவரிடம்!!! பிறர் வன்முறை பற்றிப் பேசும் தகுதிகூட இவருக்கில்லை.

நாம்பார்க்கும் காட்சிகளினூடாக எப்படி ஏமாறுகிறோம், ஏமாற்றப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுகிறோம் என்பதற்காக விர்ஜென்ஸ்ரென் (wittgenstein) கூறுகிறார். «la facultté de deviner, ce qu'on n'a pas vu à partir de ce qu'on a vu.» (நாம் பார்ப்பவற்றின்ஊடாக, நாம் காணாதிருப்பவைபற்றி அறிந்து கொள்வதுதான் (மனிதனின்) சாமர்த்தியம். நான் அரசியலில் ஏமாந்தது பத்மநாபா, பிரபாகரன், பாலகுமார், சிறீசபாரட்ணம் நால்வரும் கைகோர்த்திருந்த புகைப்படத்தைப்பார்த்து. அதை ஓர் ஐக்கியம் என்பதாக. நான் கண்டுகொள்ளாதது அவர்களது உள் முரண்பாடுகளை.

பொலிசாரால் தாக்கப்படும்போது எடுக்கப்பட்ட கூட்டணித் தலைவர்களினது புகைப்படம் பிரபல்யப்படுத்தப்பட்டபோது. அவர்களது வலியும் வேதனையும் இரண்டாம்பட்சமாகிறது அதைப்பார்த்து மக்கள் ஏமாறுவதே அவர்களது முதன்மையான நோக்கம். மேலும் இலகுவாகப் புரிவதற்காக கூறுவதாயின். தனது நண்பன் சபாலிங்கம் கொலை செய்யப்பட்டதற்காக துன்பப்பட்டவர் புஸ்பராஜா என்பது உண்மையான விடயமாயினும், இப்புத்தகத்தில் கொலை செய்யப்பட்ட சபாலிங்கத்தின் புகைப்படமானது புத்தகத்திற்கு வலிமைசேர்ப்பதே முதன்மையான நோக்கமாகிறது. இதில் சபாலிங்கத்தை இழந்த துன்பம் புஸ்பராஜாவிற்கு இரண்டாம் பட்சமாகிறது. இதே போல் மாவீரர்களின் புகைப்படங்கள், இயக்கத் தோழர்களின் மரணச்செய்திகள் என யாவும் கட்சிகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறதென்பதுதான் புகைப்படங்களினூடாக, நம்மால் கண்டுகொள்ளப்படாத உண்மைகள்.

எமது தமிழ்ச் சமூக வரலாற்றில், அரசியல் வாதிகள் எனப்படுவோர் அவர்கள் அப்புக்காத்து அரசியல் வாதிகளாக இருப்பினும்,ஆயுத அரசில் ஹீரோக்களாக இருப்பினும் அவர்கள் தம்மேல் உள்ள பெருமை, கௌரவம், பயம், பிரமிப்பு போன்ற உணர்வுகளுடன் மக்கள் இருப்பதைத் தக்கவைத்துப் பேணுவதில் காரியத்துடன் செயற்பட்டவர்கள், செயற்பட்டும் வருபவர்கள்.

«தமிழர்கள் இன்று நடாத்துவது சமஉரிமைப் போராட்டமோ, சலுகைப் போராட்டமோ, தரப்படுத்தல்-வேலைவாய்ப்புக்கான போராட்டமோ அல்ல. இது சுதந்திரத் தமிழ் ஈழத்திற்கான விடுதலைப் போராட்டம். என்ற கருத்தை எமது மக்கள் மத்தியில் முன்வைத்துப் போராட்டத்தை முனைப்படுத்தியவர்கள் நாங்களே...தெளிவான கொள்கை விளக்கங்கள் போன்றவற்றில் கூட்டணித் தலைவர்கள் மட்டுமல்ல, கூட்டணியின் ஆதரவாளர்களும் பயந்துபோய் இருந்தனர்».(ப.131) விசுக்கோத்து அரசியல் கொள்கைவிளக்கம். மேற்படி சலுகைகளுக்காக போராடவில்லை என்றால் அவைகளை நிராகரிப்பதற்கான காரணம் என்ன? சுதந்திரத் தமிழ் ஈழத்திற்கான விடுதலைப்போராட்டம் என்றால் அந்த சுதந்திரத் தமிழ் ஈழமானது எந்த அடிப்படையில்? பிரபாகரனின் இடைக்கால அரசுக் கோரிக்கையின் அடிப்படையிலா? அல்லது நீங்கள் முடிசூடி புஸ்ப--'ராஜா' வாக இருக்கும் சுதந்திரத் தமிழ் ஈழமா?

உங்கள் வணக்கத்திற்குரியவர்களான (அமிர்தலிங்கம்) கூட்டணியினர்



தாங்கள் சொன்னதை செய்யவில்லை என்பதாலும், அதற்காக ஆயுதம் ஏந்தியவர்களும் மக்களின் நலன்களில் அக்கறையில்லாது தமது பதவிகளுக்காகவும் கட்சி நலன்களுக்காகவுமாக தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டத்தை நாசப்படுத்தி விட்டார்கள் என்பதும், குறிப்பாக நீங்கள் சிறையில் இருந்தபோது தலைமையின் வழிகாட்டல் இல்லாததாலும் அவர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளாலும் போராட்டம் நாசமாப்போச்சு!!! உங்கள் பாராட்டுக்குரிய திறைமையுள்ள பாராளுமன்ற வாதிகளால், இந்திய பாப்பனீய காங்கிரசின் அரசியலை உல்டாப் பண்ணியே தீட்டப்பட்ட வட்டுக்கோட்டை மாநாட்டுத்தீர்மானங்களிலும், வல்வெட்டித்துறை மாநாட்டுத்தீர்மானங்களிலும் நம்பிக்கையுள்ள நீங்கள் அவர்கள் அதை நிறைவேற்றவில்லை என்பதுதான் அவர்கள்மீது நீங்கள் வைக்கும் குற்றச்சாட்டு.

«ஒருசுதந்திர இறைமையுள்ள மதச்சார்பற்ற, சோசலிச, தமிழ்ஈழ அரசைமீள்வித்துப் புனரமைப்பு செய்வது தவிர்க்கமுடியாததாகிவிட்டது என்று இந்தமாநாடு தீர்மானிக்கிறது.» (ப:211) 'மீள்வித்து'!! ஏற்கனவே இருந்திருக்கிறதா மதச்சார்பற்ற சோசலிச தமிழ்ஈழ அரசு? அல்லது அப்புக்காத்து அரசியல்வாதிகள் தாம் ஆங்கிலத்திலேயே சிந்திப்பதால் அவர்களுக்குத் தமிழ்தெரியாத (மீள்வித்து) குறைபாடா? ஊங்களது ஈழப்போராட்டச் சிந்தனையும் ஆங்கிலத்தில்தானா ?

தரப்படுத்தல், சிங்களத் தனிச்சட்டம்,பாரம்பரிய பிரதேசம் பறிபோவது, இவைகளே தமிழ்த் தேசியத்திற்கான கோசங்களாக இருந்தது, இருந்தும் வருகிறது. எமது தமிழ்(அரசியல்) கல்விமான்களால் எமது சமூகத்திற்கும்-எமது மக்களுக்குமான பயன்பாடுகளும், கல்விமான்களுக்கும் சாதாரண மக்களுக்கும் இடையிலேயான சமூக உறவுகள் எவ்வகையில் பேணப்பட்டது.விவசாயம், மீன்பிடி, கைவினைத்தொழில், கள் இறக்கும் தொழில், சுத்திகரிப்புத்தொழில் (மலம்உட்பட) போன்ற தொழில்களுக்காக இவர்கள் தாம் பெற்ற கல்வியால் ஈட்டிய பெரும்பணிகள்தான் என்ன?

மேற்குறிப்பிட்ட தொழிலாள சமூகங்களுக்கும் கல்விச்சமூகங்களுக்குமான சமூக மதிப்புகள் எவ்வாறு பேணப்பட்டது? தரப்படுத்தல் எனக்கோசம் போட்டு இவர்களைப் பலிகொடுப்பது தேசியத்திற்கான வேள்வியா?

சிங்கள மொழிச்சட்டத்திற்கு எதிராக இவர்களது சத்தியாக்கிரகமும், அச்சட்டத்திற்கு மாறாக இவர்கள் முன்வைத்த கோரிக்கையானது, சிங்கள இனவாதத்தின் பிரித்தாளும் தந்திரோபாய அரசியலுக்கு நிகரான, தமிழ்த்தேசிய இனவாதத்தால் மேற்கொள்ளப்பட்ட பிரித்தாளும் தந்திரோபாயமாகவேமேற்கொளள்ப்பட்டு வருகிறது.ஒரு தேசத்தில் வாழும் இரு மொழிபேசும் மக்களுக்கிடையிலேயான கலாச்சாரப் பண்பாட்டு

www.tamilarangam.net



உறவுகளையும், அரசியல் உரிமைகளையும் பிறர் தலையீடின்றி தாமே பகிர்ந்து உறவாடிப் புரிந்து கொள்வதற்கு தடையாக இருப்பது இவர்கள் மேற்கொண்ட இனவாத- மொழி அரசியலாகும். இருமொழி பேசும் மக்களைக்கொண்ட ஒரு தேசத்தில் இரு மொழிகளும் ஆரம்பக் கல்வியிலிருந்தே கட்டாய பாடமாக பயில்விப்பதனூடாக எதிர்கால சமுதாயங்களேனும் இனவாத சூழ்ச்சியிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கு மிகப் பயனுள்ள செயல்பாடாக அமையும். அதற்கான முயற்சியில் எந்த அரசியல் வாதியும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. சிங்கள மொழிக்கெதிராக பலிகொடுத்ததும் தமிழ்த் தேசியத்திற்கான வேள்வியாகியது.

நாம் அறிந்த பல குடியானவர்கள் கல்விமான்களிடம், அதிகமாக அட்வகேட்மாரிடம் தமது காணிகளை அடைவிற்கு வைத்து மீளமுடியாது தமது காணிகளைப் பறிகொடுத்தவர்கள். அவர்களுக்கு சிங்களப்பிரஜை ஒருவன் பக்கத்து வீட்டில் வசிப்பதால் என்ன தீங்கு நிகழ்ந்திடப் போகிறது. ஆனால் இவர்களையும் பலி கொடுத்தோம் தேசிய வேள்விக்காக!!!. இவ்வகையான தேசிய வேள்வி மீதெல்லாம் உங்களுக்கு எப்படி கேள்வி எழும்.வேள்வி கேட்டு சன்னதமாடியவர்களுக்கு நீங்கள் இரசிகனாக இருக்கும்வரை. உங்கள் பெயரைப்பத்திரிகைகளில் வெளிவருவதற்கு காரணமாக இருந்ததற்காகவும், தங்களுடன் ஒன்றாக போட்டோ எடுக்க வைத்ததற்காகவும் நீங்கள செய்யும் செஞ்சோத்துக்கடன்தானே உங்களுடைய போராட்டவரலாறு. இல்லாது போனால் «உங்களது பெயரும் எனது புத்தகத்தில் இடம்பெற்றிருக்கிறது» என அழைப்பிதல் அனுப்பிக் கூட்டம்சேர்ப்பீங்களா? என்ன பிழைப்பிது!!!

உங்கள் நூல் வெளியீட்டுச் சடங்கில் திருமதி அமிர்தலிங்கம் கூறினார், தம்மால் மேற்கொள்ளப்பட்ட போராட்டமானது புனிதப் போராட்டமாக இருந்ததாக. புலிகளால் அமிர்தலிங்கம் கொலை செய்யப்படாது வேறொரு கூட்டணி உறுப்பினர் கொலை செய்யப்பட்டிருந்தால் இந்த மங்கையற்கு 'அரசி' இன்று புலிகளின் ஆசீர்வாதத்துடன் தேர்தல் பிரச்சாரத்திற்காக கீதம்பாடி வோட்டுக் கேட்டு அலைந்திருப்பா என்பதற்கு ஆதாரமா இல்லை!! சிறீசபாரட்ணத்தை பலி கொடுத்த அடைக்கலநாதன் 'அம்மான்' (நன்றி தேனீ.கொம்) எங்கே! பத்மநாபாவை பலி கொடுத்த பிரேமசந்திரன் 'அம்மான்' எங்கே!! அமிர்தலிங்கத்தை பலி கொடுத்த கூட்டணி எங்கே!!

அமிர்தலிங்கமும், கதிரவேற்பிள்ளையும் தன்னை தேர்தலில் நிற்கும்படி கேட்டுக் கொண்டதாகவும் அதைத் தான் மறுத்து «நான் எங்கு நிற்கிறேன் என்பதில் நான் எப்போதும் தெளிவுடன் நிற்பவன்» (ப:197) என்பதாக குறிப்பிட்டவர். தமிழ் ஆராச்சி மாநாடு எனும் பகுதியில் «பரீட்சை நேரத்தில் படிப்பை மேற்கொள்ளாது கூட்டங்களில் பேசியதுபற்றி சரி பிழை இன்றுகூட எனக்குத் தெரியவில்லை» என்று எழுதும் பயன்பெறா புத்திக்கு, தான்



கூட்டணியின் சர்க்கஸ் கம்பனிக்கு கோமாளி வேசம் போட்டுத்திரிந்ததை எப்படி உணர்ந்திருக்கமுடியும். பிரபல்யமோகம் கொண்ட இவர் (போட்டோக்களைப்பார்த்து பிரமித்தது, காரிய அழைப்பிதல்) தேர்தலில் நிற்கக் கேட்டால் மசிரைவிட்டார்.

«படிப்பறிவு இல்லாவிட்டாலும்(!!!) பண்பான இனிமையான குணங்களைக் கொண்டவர் குலசிங்கம்»(ப:137)படிப்பறிவு இல்லாதவர் படிப்பறிவு இல்லாதவர் என பல இடங்களில் குறிப்பிடுகிறார். படிப்பறிவில்லாதவர்கள் என இவரால் இகழ்ச்சிக்குள்ளாக்கப் படுபவர்கள் இவருடன் அன்பாகவும் பண்பாகவும் பழகாதிருப்பின்; அவர்கள் மீதான இவரது கணிப்பீடும், அக்கறையும் எவ்வகையானதென்பதை வாசகர்கள் புரிந்துகொள்வர். இப்படித் தனது திமிரைக்காட்டுபவரிடம் பிறர்மீதான, மக்கள்மீதான அக்கறை என்பது எப்படிச் சாத்தியமாகும்.

தமிழ் மக்களின் சுதந்திர விடிவிற்காய் உழைத்தவர் எனக் கூறுபவரிடமிருந்து தனது புத்தக வெளியீட்டு விழாச் சடங்கிற்கு அழைக்கப்படாத (பொது அறிவித்தல்) பரிசில்வாழும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களில் நானும் ஒருவன். நடைபெறும் சடங்கைப் பார்க்கும் உச்ச ஆவலினால் உந்தப்பட்டவனாய், விழா ஆரம்பிக்கப்பட்டு சில நிமிடங்களின் பின்பே உள் நுழைந்து, கண்குளிரக் கண்டுகழித்து; புஸ்பராஜாவின் அடிக்கும், சூட்டுக்கும் இலக்காகாமல் அவர் கண்ணிலே மண்ணைத்தூவித் தப்பித்துக்கொண்டேன்.

பஸ்தியாம்பிள்ளை வாய்திறந்தால் கேட்கமுடியாத தூசணமான வார்த்தைகள் வருமாம்(ப:179) அப்ப தனது வாயிலிருந்து கொட்டுவதெல்லாம் கேட்கக்கூடிய தூசணமா!!!

ஒரு நாள், நான், தேவதாஸ், ஸ்டாலின், கற்சுறா, சோபாசக்தி, சிவதாஸ் எல்லோருமாக புஸ்பராஜாவுடன் மதுவோடு கலந்துரையாடும் போது, சோபாசக்தி கேட்டார். «அண்ண டொமினக் ஜீவா கலந்து கொண்ட இலக்கியச் சந்திப்பின் கணக்கு வழக்குகள் இன்னும் முடிக்க வில்லையாம் நீங்கள் என கதை அடிபடுகிறது» எனச் சொல்லித் தொடரும் கணத்தில் எழும்பினார்... சென்றார்.... பல பைல்களை எடுத்து வந்து எம்முன்னால் எறிந்தார் «பாருங்கோடா இதில» எனவும் கூறி «200பிராங் காசைத் தந்திட்டு கணக்குக் கேக்கிறியோ நீ...வெளியில போங்கட பு....டை ஆண்டிகளே...» எனக் கூவி எமது சப்த நாடிகளையும் சில நிமிட நேரங்கள் அடக்கிவிட்டார்.

இவருடைய புனைவுப் புத்தகத்தை வாசிப்பவர்கள் அனைவருக்கும் தெரியுமோ இல்லையோ! இவருடன் பழகுபவர்களுக்குத் தெரியும் இவர் வாயிலிருந்து கொட்டுவது என்ன பாசை என்பது. மேலும் தனது முன்னுரையிலும் சடங்குவிழாவிலும் கூறுகிறார் தான் ஜனநாயகத்தைப் பேணுவதாகவும், துப்பாக்கி இல்லாத எவருடனும் தான் பேசத்

www.tamilarangam.net



தயாரென்பதாகவும்.

அகிம்சை வாதம் பேசவும், எழுதவும் தெரிந்து கொண்டவரின் துப்பாக்கிக்கு பலியாகாமல் கோவை நந்தனால் காப்பாற்றப்பட்டவர், எனது நண்பன் தேவதாஸ். காணும் இடத்தில் சுகனைச் சுடுவேன் எனச் சூளுரைக்க பல நாட்கள் சுகன் தலைமறைவாகத்திரிந்ததும், இந்த ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம் எனும் நூலை எழுதிய ஜனநாயக வாதியிடமிருந்தே என்பதை வாசகர்கள் மனதில் கொண்டு; இவரது நூலை மதிப்பிடுவதே பொருத்தமாக இருக்கும்.

எனது பிறந்த ஊரானது பருத்தித்துறை இதற்கு மிக அருகில் உள்ளது வல்வெட்டித்துறை. குட்டிமணியின் ஓட்டியின் தம்பி எனக்கு நன்கு அறிமுகமானவர். அவர் «நேற்று காஞ்சிமாவடிவேலின் சாமான் அடிபட்டுவிட்டது (கஸ்ரம் அதிகாரிகளால் பிடிபட்டு விட்டால்) இண்டைக்கு இருபது கட்டு இறக்கிநாங்கள்» (கடத்தும் பொருட்கள்) எனகடத்தி வரும்பொருட்கள் பற்றிக் கூறுவார். இக்கடத்தல் தொழிலை குட்டி மணியும் செய்தவர்.

ஆனால் புஸ்பராஜாவிற்கு அக்கடத்தல் தொழிலானது வாணிபமாகவும், கடத்தல் தொழில் புரிபவர்கள் இந்தியாவில் 'சின்னவீடு' வைத்திருப் பதானது. «திருமணம் போன்ற குடும்பத் தொடர்புகளையும் வல்வெட்டித்துறை மக்கள் ஏற்படுத்தியிருந்தார்கள்» என திருமண நியாயமும் கூறுகிறார். பிறகு வாணிபம் பற்றிய இவரது கோட்பாட்டு விளக்கத்தையும் பாருங்க!! இந்தியாவில் ஆங்கிலேயர்களும் கிழக்கிந்தியக் கம்பெனி களும், இலங்கையில் ஆங்கிலேயர்களும் வாணிபம் மேற்கொண்டது மட்டும் இவருக்கு ஏகாதிபத்தியமாகத் தெரிவது, வல்வெட்டித்துறை முதலைகள் செய்தது மட்டும் வாணிபமாகத் தெரியுது.

இவர்களது கடத்தல் தொழிலால் பாதிக்கப்பட்ட உள்ளுர் நெசவுத் தொழிலாளர்களை இவர் அறிந்திருக்கவில்லை. சிறீலங்காசுதந்திரக் கட்சியின் இறக்குமதிக் கட்டுப்பாட்டைமீறி இக்கடத்தல் காறரால் இந்தியாவிலிருந்து கடத்திவந்த செத்தல் மிளகாயினால் உள்ளுர் விவசாயிகள் பாதிக்கப் பட்டதும் இவருக்கு என்னவாகத்தோன்றுகிறது. தனது «ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்» எனும் நூலையே உலகமயமாதலின் லெவலுக்கு வாணிபம் செய்தவருக்கு, வல்வெட்டித்துறைக் கடத்தல்காரருக்கு வக்காளத்து வாங்குவது ஒன்றும் அதிசயமான விடயமில்லை என வாசகர்கள் மிக இலகுவாகப் புரிந்துகொள்வர்.

மேலும் உச்சமான நகைச்சுவை யாதெனில் வல்வெட்டித்துறையில் பிறப்பதனாலேயே அவர்கள் இயற்கையிலேயே புஜபல பராக்கிரம சாலிகளாகவும் இருக்கிறார்கள் என, மனதில் பிரபாகரனைத் தியானித்துக் கொண்டு கண்டபடி கிறுக்கியுள்ளார்.



*« வல்வெட்டித்துறை மக்களிடம் உள்ள விடுதலைப்போராட்டம் மீதான ஆர்வத்தை யாரும் சந்தேகிக்க முடியாது. விடுதலைக்காக தங்களையே அழித்துக்கொண்ட மக்கள். அவர்களது வாழ்க்கை போர்மையமான வாழ்க்கைதான் ஆண்டாண்டு காலமாக அரசபடைகளுடன் மோதியே வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள், வல்வெட்டித்துறை என்றால் மாத்தறை வாழும் சிங்களவர்களுக்கே தேள்கொட்டியமாதிரி»* சரி ஐயா, வல்வெட்டித்துறை தவிர்ந்த பிற ஊரரின் விடுதலைப்போராட்டம் மீதான ஆர்வம் சந்தேகிக்கக் கூடியதெனில், நீங்கள் விட்டதும் றீல் தானே....? இவரது anthropoloque அறிவை நினைத்தால் புல்லரிக்கும் வாசகர்களுக்கு.

உயிர்நிழல், எக்சில் வெளியீடுகள் கொரில்லா போன்று வாசிப்பின் பாலான ஒரு விமர்சனக் கூட்டங்களை நிகழ்த்தியது போல், புஸ்பராஜாவும் தனது நூலையும் நேர்மையான, பலரின் வாசிப்பிற்கு பின்பாக அவரது சடங்கை மேற்கொண்டிருப்பாராயின்; கலகத்தோழர்கள் நினைத்ததுபோல் (சோபாசக்தி சொன்னால் சுகன் சொன்னது போல், சுகன் சொன்னால் சோபாசக்தி சொன்னது போல் அர்த்தமாகும்) புஸ்பராஜாவின் புத்தகத்தின்மீது மூத்திரம் விட்டுக் கொழுத்தி எமது எதிர்ப்பைத் தெரிவித்திருக்கலாம்.

எனக்கு பிரான்சில் உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள் என யாரும் இல்லாதபோதும்; பரிசில் இருக்கும் ஒருவரிடம் எனது ஊர் நண்பரின் சிபாரிசின் பேரில், இரண்டு வருடத்திற்குள் பணம் திரட்டிக் கொண்டு போகும் திட்டத்துடன் 1984 ஆம்அண்டு பிரான்சிற்குள் நுழைந்தேன். இலங்கையின் யுத்த சூழலைக் காரணமாகக் கொண்டே அரசியல் தஞ்சம் கோரி எனது இருப்பை தக்கவைத்துக் கொள்ளும் நிலையிலான எனது குற்ற உணர்வினாலும், நான் இருந்த றூமில் இருந்தவர்களுக்கும் எனக்கும் இடையிலேயான சிந்தனை உறவுகளில் நெருக்கமின்னையிலான புறச்சூழலினாலும் உந்தப்பட்டு, எனது குற்ற உணர்வைத் சற்றுத் தணிக்கும் நோக்கத்தின் காரணமாகவே அந்தக் காலகட்டத்தில் மிகப் பெரிய இயக்கமாக தோற்றம் தந்த ரெலோ இயக்கத்துடன் இணைந்து இங்கு வேலைசெய்ய முடிவெடுத்தேன்.

பிற்பாடு தேவதாஸ், சுந்தரலிங்கம், கலாமோகன் போன்றவர்களைத் தொடர்ந்து சந்திக்கும் வாய்ப்புக்கிடைத்தது. நான் மிகப் பெரிய!! இயகத்திலேயே சேர்ந்து பங்களிக்க விரும்பியிருந்தும் மேற்படி மூவரினாலும் ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்காக 'வென்றெடுக்கப்பட்டு', இங்குள்ள அக்கட்சியின் பிரதிநிதியான புஸ்பராஜாவுக்கும் அறிமுகமாகினேன்.

இவர் எழுதிய பிரான்சில் ஈ. பி. ஆர். எல. எவ் இயக்கம் எனும் பகுதியும், எனது தாய் மண்ணில் என்ற பகுதியில் குறிப்பிட்ட தகவல்கள் யாவும் மிகப் பெரிய பொய் மட்டுமல்லாது அண்டப்புழுகும். ஆகாசப் புழுகுமாகும். இதனூடக இவர் சாதிக்கவிரும்புவதுதான் என்ன!!.

இன்று நிருபணபமாகி வரும் உண்மையானது பிரபஞ்ச வெளியை;

www.tamilarangam.net



**அதனது பரிபூரண உண்மையை எம்மால் கண்டுகொள்ள முடியாது என்பது மட்டுமல்லாது, மனிதரையும் பரிபூரணமாக அறிந்திட முடியாது என்பதே. ஆயினும் சமூகநலனுக்காக செயல் படுகிறோம் என்பவர்களையும் அவர்கள் யாருக்காக, எவர் நலன்களுக்காக சேவைசெய்கிறார்கள் என்பதைக் கண்டறியும் ஆற்றல் மனிதனிடம் இருப்பதையிட்டு நாம்பெருமையடையலாம்.**

தேவதாஸ் பத்மநாபாவின் தாடியைப்பார்த்துத்தான் இது ஒரு நல்ல இயக்கமாக இருக்குமெனக் கூறியதாக எழுதியிருப்பதையிட்டு, என்னால் இதுசம்பந்தமாக இரண்டு நியாயத்தைக் கூறமுடியும் ஒன்று இவர் இப்புத்தகத்தில் எழுதிய பல விடயங்கள் தான் கனவில் கண்டவற்றை, அது நனவா கனவா எனப் பிரித்தறியாத்தன்மையால் எழுதி இருக்கலாம், அல்லது மிகப்பாதிப்புகளுக்குள்ளான ஒரு மன நோயாளியினாலான எழுத்தாக இருக்கலாம் என்பதே.

இவர் பத்மநாபாவின் போட்டோவை காரியாலத்தில் கொழுவி அழகுபாத்த போது. இது ஒரு தனிநபர் வழிபாட்டிற்கு நாம் துணைபோகும் காரணியாகிவிடும் எனக்கூறி போட்டோவை அகற்றும்படி எம்மில் பலர் கூறியும் அடம்பிடித்துக்கொண்டு, ஒரு கட்சியின் தலைவரின் போட்டோவை நாம் வைத்திருப்பதில் என்ன தவறு என்றும் இதற்காகவே மத்திய கொமிட்டியின் முடிவைக்கேட்டுத்தான் நான் முடிவெடுப்பேன் என மல்லுக்கட்டி, பிற்பாடு கட்சி இதற்கெல்லாம் தலையிடமுடியாது நீங்களே ஜனநாயகமுறைப்படி முடிவெடுங்கள் எனக்கூற பெரும்பான்மை வாக்குகளால் போட்டோ அகற்றப்பட்டது. போட்டோவிற்கு முன்நின்று எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் தேவதாசும், மனோவுமாகும் (அம்மா).

நான் இவர் மனநோயாளியாக இருக்கலாம் என எழுதியதற்கான மேலும் ஒரு உதாரணம் பாருங்க. பிரான்சில் சங்கேமுழங்கு எனும் பகுதியில் எழுதுகிறார். «ஈ.பி. ஆர். எல்.எவ். உடன் சேரும் பட்சத்தில் தமிழ் ஈழவிடுதலைப் பேரவை தனது வேலைகளை ஈ.பி.ஆர். எல். எவ் க்காக மட்டுமே செய்யமுடியும், என்ற நிலை ஏற்படும் அதனால் அதன் பொது சேவையைப் பலர் இழக்க வேண்டி ஏற்படும்» (ப.377) எனப் பம்முகிறார்.

அப்ப நீங்க EPRLFஇல் இணைந்து செய்த சேவையெல்லாம் உங்களுக்கானதே, உங்களின் பெயருக்கானதே, உங்களின் பிரபல்யத்திற்கானதே, உங்கள் பந்தாவிற்கானதே, உங்கள் சண்டித்தனத்திற்கானதே, என உங்கள் பேதலித்த புத்தியுடன் தரும் சுயவாக்கு மூலம்தானே. «ஈழப்போராட்டத்தின் எனது சாட்சியமும்.» «தியாகநாதன் என்பவர் பிரான்ஸ் கிளைக்குப் பெரும் உழைப்பாளி» (ப:372) இத்தியாகநாதன் என்பவர் புஸ்பராஜாவிற்கே பயன்படுபவராக இருந்தவர். இந்நபரை நாம் கொமிட்டியில் பிரமிப்புடன் பார்ப்பதுண்டு. இங்கு எம்மைப்போல் வேலைசெய்யாவிடினும் வித, விதமான உயர்ரக உடைகள் அணிந்து கொமிட்டியில் சமூகமளிக்கும்போது எமக்குள்



நாம் புருவங்களை உயர்த்திக் குழம்பியிருக்கிறோம். ஒரு நாள் இவர் காரியாலயத்தில் மறைவாக வைத்த பணம் (7000 பிராங்க்) மனோவால் கண்டெடுக்கப்பட்டு பாலகிருஸ்ணனிடம் கையளிக்கப்பட்டது. இதற்காகவே பல ஞாயிறுகளை நாம் தொலைத்திருக்கிறோம் இறுதியில் புஸ்பராஜா வாலும், தியாகநாதனாலும் பாலகிருஸ்ணன் ஒரு உளவாளி எனக் குற்றம் சாட்டப்பட்டு, கொமிட்டியிலிருந்து பாலகிருஸ்ணனை வெளியேற்ற வேண்டும் என முடிவெடுத்தனர். இதற்கு எம்மில் பலர் எதிர்ப்புத் தெரிவிக்க இதற்கும் மத்திய கொமிட்டியின் ஆலோசனை கேட்கப்பட்டு, லண்டனிலுள்ள மத்தியகொமிட்டி உறுப்பினரான சாந்தன் இங்கு வந்து அவரது விசாரணையில் பாலகிருஸ்ணன் தொடர்ந்து கொமிட்டியில் வேலை செய்யலாம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவரது தன்னிச்சையான முடிவுகள் எதுவும் கொமிட்டியில் நிறைவேற்ற முடியாத நிலைமையின் வேதனையில்தான் «ஈ.பி.ஆர்.எல். எவ். அதீத ஜனநாயக நோய்பிடித்து...» (ப:386) எனக்குறிப்பிட்டிருக்கிறார்.

தியாகநாதனினால் உருவான பிரச்சனையின் உண்மைநிலை யாதெனில் அவர் பாஸ்போட்டக்களில் தலைமாத்துவதும், போலி எக்சிற் சீல்கள் தாயரிக்கும் வாணிபத்தை(!!!) (புஸ்பராஜாவின் கோட்பாட்டில்) மேற்கொண்டவர். இவரைக் காப்பாற்றவே பாலகிருஸ்ணனுக்கு எதிரான உளவாளி எனும் குற்றச்சாட்டு. எமது கொமிட்டியில் அனைவருக்கும் தெரிந்த விடயம் அன்றைய காலகட்டத்தில் நிலவிய இடதுசாரிக் கருத்துக்களின் நியாயங்களுக்கு ஏற்ப கட்சியை நகர்த்தியது உமாகாந்தன். கட்சியை நிர்வாகரீதியாக கட்டமைத்துச் சென்றது பாலகிருஸ்ணன் என்பதை. அப்ப நீங்கள் வியப்படையலாம் எமது தமிழ் இளைஞர் பேரவையின் முதலும் மூத்த தலைவருமான சி.புஸ்பராஜா வின் சேவையும், பங்களிப்பும் பிரான்சுக் கொமிட்டியில் என்னவாக இருந்தது என, உங்கள் வியப்பு நியாயமானதே. ஈ. பி.ஆர். எல் . எவ் இன் பிரான்ஸ் கொமிட்டியில், தலைவர், தலைமை எனும் பக்திநிலை இருந்ததில்லை .

இதற்கு ஒரு உதாரணமே எமது காரியாலயத்தில் பத்மநாபாவின் போட்டோவை அகற்றிய நடவடிக்கையாகும். இப்படி இருக்க , உமாகாந்தன் பிரான்ஸ் கிழைத் தலைமைக்கு ஆசைப்பட்டார் எனும் புலுடாவேற. ஓவ்வொருத்தருக்கமான பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டதில்..!! கட்சிப்பத்திரிகையாக, உமாகாந்தனை ஆசிரியராகக் கொண்டு பல வருடங்கள் வெளிவந்த தமிழ்முரசில் ஒரு வரிகூட எழுதமுடியாதிருந்த புஸ்பராஜா; பிரான்ஸ் அரசின் சட்டவிதிகளுக்கமைய ஸ்தாபனம் பதிவு செய்யப்பட்டதால் கோப்புகளில், தலைவர் என சீல் அடித்து அதில் கையொப்பம் இடும் தகுதிமட்டுமே கொண்டிருந்தார். தமிழ் முரசின் எடிட்டோரியலையும் படித்தே நான் இங்கு கட்சி வேலைகளில் ஈடுபட்டிருந்த போதிலும் எழுதும் ஆவலினால் உந்தப்பட்டு, 1985ஆம் ஆண்டில் பிரான்ஸில் புகழ்பெற்ற கவிஞர்களான அருந்ததி, செல்வம் (காலம்) போன்றவர்களின்

www.tamilarangam.net



கவிதைகளே 'தமிழ்முரசில்' இடம்பிடித்தகாலம். நானும் சிறீலங்கா இனவாத அரசின் தமிழர்மீதான படுகொலைகளைக் கண்டிக்கும் ஒரு கவிதை படைத்து ஆசிரியரின் பார்வைக்குச் சென்றபோது..... «நான் சில கவிதைத் தொகுப்புகள் தாரன் அதை முதல்படி» என உமாகாந்தன் சொல்ல, அதோட சபதம் செய்தேன் பேனை தூக்குவதில்லையென. கொடிபிடித்த தொண்டனான எனக்கே எழுதும் ஆவல் இருந்திருக்கிறது!!

நாம் எவ்வளவோ ஆக்கபூர்வமான வேலைகளைச் செய்யவேண்டிய சூழலில், இப்படியெல்லாம் தனிநபர் பற்றி எழுதி நேரத்தை விரயம்ஆக்குவதையிட்டு மிகவும் வேதனைப்படுவேண்டியிருக்கிறது.

கடந்தகாலங்களில் புஸ்பராஜா சிறையில்பட்ட துன்பங்களை விபரிக்கிறபோது வாசகர்களுக்கு மிகவும் வேதனையைக் கொடுப்பதாகவே இருக்கும் என்பது உண்மையே. ஆனால் ஒரு விடயத்தை வாசகர்கள் கவனத்தில் கொள்வார்களேயாயின். பொலிஸ் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சித்திர வதைகள் இவர் வர்ணிக்கும் அளவிற்கு உண்மையானதா!!! என எழும் வியப்பு தவிர்க்கமுடியாததாகவே இருக்கும்.

இந்திய இராணுவத்துடன் கப்பலில் இலங்கை போகும்போது «..கப்பலுக்குள் கடற்குளிர் வாட்டியது, படுக்கை விரிப்பு இல்லாமல் படுக்க நேர்ந்ததால் நித்திரை வரமறுத்தது. எமக்கு பயண ஏற்பாடு செய்து அனுப்பிவைத்த சுகி மீதும், சோமு மீதும் கடும் கோபம் ஏற்பட்டது... ஈ.பி.ஆர்.எல்.எவ் இனர் பலர் பல தடவைகள் இப்படியான கப்பல் பயணம் செய்துள்ளனர், ஆனால் ஒருவர்கூட எமது பயணத்திற்கான அறிவுரைகள் எதுவும் எமக்குச் சொல்லவில்லை என்பதுடன், தூங்கு வதற்கானபடுக்கை விரிப்பையோ தலையணையையோ எடுத்துச் செல்லவில்லை இதனால் நாம்மிகவும் துன்பப்படநேர்ந்தது» (ப:441) சுகியும், சோமுவும் உங்களைத் தம்மைப்போல் மக்கள் விடுதலைப் போராளிகளாக நினைத்தது அவர்கள் செய்த மிகப்பொரிய தவறுதான்.

ஒருவர் ஏழு வருடங்களுக்குப்பின்பு நாடுதிரும்புகிறவருக்கு இருக்கும் பேரின்பத்தில் அதுவும் புதுவகையான பயணத்தினூடக (இந்திய இராணுவத்துடன் கப்பலில்) ஒரு குதூகல உணர்வுநிலையிலான மிதப்பு நிலையில் வசதியான தூக்கமும், வயிறு நிறைந்த பசியும் தேவையெனில் அவர்யார்!!!

மலையென எழும் அலையை ஊடறுத்து, புயல் வீசிக் கொந்தளித்த பாக்கு நீர் அணையை பல தடவை கடந்த இவர் போராளியாம்!!! பொலிசின் விபரிக்கவே வார்த்தைகள் இல்லா சித்திரவதைகளை(!!!) அனுபவித்த ஒருவருக்கு சில மணிநேரங்களைக் கடப்பதற்குள் பாலும், பஞ்சணையும் கேட்குதென்றால்!! இவர் யார்!!! இவரால் எப்படி சிறையில் தனக்கேற்பட்ட சித்திரவதைகளை த்தாங்கிக் கொள்ள முடிந்தது.



இந்திய இராணுவத்துடன் இலங்கை போய் வந்த இவரால் எமக்குத் தரப்பட்டதகவலானது என்னும் ஒரு வருடம் இந்திய ஆமி இலங்கையில் நிற்குமாயின் களைகளெல்லாம் பிடுங்கப்பட்டு (புலிகளைக் கொன்று) ஈ.பி.ஆர்.எல். எவ். எவராலும் அசைக்க முடியாது பலம் பெற்றுவிடும் என்று. இவர் இப்படிச் சொல்லியிருப்பார் என நீங்கள் நம்பக்கூடிய தகவலை அவரே தருகிறார். «இந்திய இராணுவம் வெளியேறாமலும் இருந்திருக்குமாயின் வரதராயப்பெருமாள் பல சாதனைகள் படைத் திருப்பார்» (ப:325) அதையும் தாண்டி வரதராஜப்பொருமாளுக்கு காவடி வேற எடுக்கிறார் பாருங்க. «சுதந்திரமான ஒரு சூழலில் வரதராஜப்பொருமாளை அரசியல்களத்தில் விட்டுப்பார்க்கும்படி சவால் விடுகிறேன்» (ப:326) இவரது அரசியல் வாதிகளை மதிப்பிடும் தகுதியானது என்ன விறுத்தத்திலுள்ளது பாருங்க. ஒரு காரியவாதியானவன் மொழியைப் பயன்படுத்தும் சாதுரியத்தால் ஒரு விடயத்தை சரியாகவும் வாதிடமுடியும் அதே விடயத்தை தவறாகவும் வாதிடமுடியும். (மொழிகளின் பலவீனங்களில்...!)

புகலிட இலக்கியச் சந்திப்புக்குளுவினர்களில் வாய்நிறைந்த தூஷணத் தோடும் இடுப்பில் பிஸ்டலோடும் நடமாடும் ஒரு ஜனநாயகவாதி(!!!) புஸ்பராஜாவே என்பது எம்மில் பலர் அறிந்த செய்தி. புஸ்பராஜாவின் பிஸ்டலால் மிரட்டப்பட்டவர்களில், தேவதாசும், சுகனும் என்பதும் பலர் அறிந்த செய்தி புஸ்பராஜாவின் பிஸ்டலுக்கான அடுத்த இலக்கு நான்தான் என்பதும் இக்கட்டுரை புலப்படுத்தும் செய்தி... என்னைக் காரணம் எதுவும் சொல்லிக் கொல்லும் நிற்பந்தச் சிரமம் எதுவும் புஸ்பராஜாவிற்கு கொடுக்க விரும்பாத எனது நற்குணத்தால் நான் 'அசுரா' ஆகிவிட்டேன். கொல்லப்படவேண்டியவன் அசுரன் என்பதற்கு எமது இந்துத்-தமிழ்ச்சமூ கத்திற்கு ஆதரமா தேவை? (கனடாவில் இருந்து வெளிவரும் என நம்பிய ஒரு சஞ்சிகைக்கு வி.சீ.கந்தையாவின் 'மட்டக்களப்புத் தமிழகம்' எனும் நூலிற்கான எனது விமர்சனக் கட்டுரையை எழுதிய கணத்திலிருந்து நாதன் என்பவனாகிய நான் 'அசுரா' ஆகிவிட்டேன்.

இதுவரை சுட்டிக்காட்டிய எனது இந்தச்சுண்டங்காய் நியாயங்களைவிட புஸ்பராஜாவின் «ஈழவிடுதலைப் போராட்டத்தில் எனது சாட்சியம்» எனும் நூலிற்கான, 175 பக்கங்களைத் தாண்டிய அட்டகாசமான எதிர்வினையாக சோபாசக்தியால் முன்வைக்கப்படப்போவதற்கு புஸ்பரா ஜாவால் எவ்வாறு தமிழ்ச் சூழலுள் முகம் காட்டமுடியும்.

www.tamilarangam.net



« யுத்தம் யாருடனும் செய்யலாம்
புத்தகம் யாரும் வெளியிடலாம்
ஆனால் எழுத்து எந்த நேரமும்
இறுக்கமாக இதயத்தில் இருக்கும்
எமது தோழர்கள் எமது நண்பர்கள் அப்படித்தான் »

## உமாகாந்தன்

«ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்» என்னும் புஸ்பராஜா அண்ணரின் நூல் தொடர்பான எனது பார்வையே இது. அதுவும் குறிப்பாக பிரான்சில் மேற்கொள்ளப்பட்ட தமிழ் அரசியல் நடவடிக்கைகள். அதுவும் குறிப்பாக பிரான்சில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக அவர் தனது நூலில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக எனக்குப்பல முரண்பாடுகள் உள்ளன.

நான் பிரான்சுக்கு 1981 இன் ஆரம்பத்தில் வந்தேன். புஸ்பராஜா அண்ணர் தனது நூலில் இலங்கையில் எனக்கும் அரசியலுக்கும் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் தமிழ் அரசியல் என்பது தமிழ்க்காங்கிரஸ், தமிழரசுக்கட்சி, தமிழர்விடுதலைக்கூட்டணி, இளைஞர் பேரவை, ஈழவிடுதலை இயக்கம் என்பவை மட்டுமல்ல. வழமையான யாழ்ப்பாணத்து நடுத்தர வர்க்க மாணவர்கள், இளைஞர்கள் போல நானும் எனது நண்பர்களும் 1977 ம் ஆண்டின் பொதுத் தேர்தலின்போது தமிழர் விடுதலைக்கூட்டணியின் வெற்றிக்காக தீவிரமாக வேலைசெய்தோம். இதற்கான சாட்சி புலிகளால் கொல்லப்பட்ட யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் திரு. யோகேஸ்வரன் அவர்கள். ஆனால் கூட்டணியின் உண்மை ரூபங்கள் எமக்குத் தெரிய ஆரம்பித்தன.

அவர்களது நடவடிக்கைகளுக்கு எதிராக நான் அந்தச் சமயத்திலேயே அவர்களுக்கெதிரான கட்டுரைகளை 'சுதந்திரன்', 'ஈழநாடு' போன்ற பத்திரிகைகளில் முழுப்பக்கக் கட்டுரைகளை எழுதியிருக்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் எனக்கு மனிதன் அமைப்பின் விமலதாஸ் உடன் தொடர்பு ஏற்பட்டது. கூட்டணியிலுள்ள எனது நண்பர்களுடன் காரசாரமாக விமர்சித்துக் கொண்ட என்னை அடையாளம் கண்டுகொண்ட அவர் தன்னை ஒரு குறிப்பிட்ட இடத்தில் இரண்டு நாட்களின் பின் சந்திக்கும்படி கேட்டுக் கொண்டார். அப்படியே நான் அவரை சந்தித்ததன் பிற்பாடே எனக்கு தமிழ்பேசும் மக்களின் அரசியலில் இன்னுமொரு பக்கம் இருக்கிறது என்று அவரைச் சந்தித்த நாளிலிருந்து தெரிந்து கொண்டேன்.

பொருளாதாரம், அரசியல், சாதியம் போன்ற பலவகையான கருத்தரங்குகள், விரிவுரைகள் போன்றவை பல்கலைக்கழக மாணவர்களால்



எமக்கு பல்வேறு இடங்களில் வைத்துரைக்கப்பட்டன. அதன் பின்னர்தான் மாலை, மரியாதை, சிறை, மேடை போன்ற மாயைகள் என்னிடமிருந்து விலகின. விமலதாஸிற்கும் என்குறித்து நம்பிக்கை ஏற்பட்டது. இந்த நிலையில்தான் மலையகத்தில் தோட்டத் தொழிலாளியான சிவனு இலட்சுமணன் அரசபடையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். மலையக மக்கள் குறித்து யாழ்ப்பாண மக்கள் அதிகம் அக்கறை கொள்ளாத நேரமது. அந்த நேரத்தில் திடீரென எனது வீட்டிற்கு வந்த விமலதாஸ் நாளை மறுதினம் யாழ் நகரமெங்கும் சிவனு இலட்சுமணன் மரணம்தொடர்பான கண்டனசுவரொட்டிகள் ஒட்டப்படவேண்டும் எனவும் அது எனது பொறுப்பு என்றும் கேட்டுக்கொண்டார். அவர் குறிப்பிட்ட கால இடைவேளைக்கிடையில் யாழ் நகரமெங்கும் சிவனு இலட்சுமணனின் கொலைக்கெதிரான கண்டன சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. இதிலே குறிப்பிடப்படவேண்டிய விடயம் என்னவென்றால், இந்த சுவரொட்டிகளை எனது சகோதரிகள், மற்றும் நண்பர்கள் எழுதித்தர எனது அம்மா பசை காச்சித்தர அரசியலோடு எந்தத் தொடர்புமில்லாத யாழ்ப்பாண பிரபல கல்லூரி மாணவர்கள் இரவோடு இரவாக இந்தச் சுவரொட்டிகளை ஒட்டியதுமாகும். இந்தச் செயற்பாடு விமலதாஸைத் திருப்திப்படுத்தியது. தொடர்ந்து பல வேலைகளை எனது பொறுப்பில் தந்தார். நானும் என்னால் முடிந்த அளவிற்குச் செய்தேன்.

இந்நிலையில்தான் 'மனிதன்' சஞ்சிகை இரண்டு இதழ்களை தொகுத்து வழங்குமாறு கேட்டுக் கொண்டார். பத்திரிகைகளில் எழுதிய எனக்கு பத்திரிகை ஆசிரியராக செயற்பட்டது இதுவே முதல் தடவை. அதனையும் நான் திருப்திகரமாகச் செய்து முடித்தேன்.

வழமை போன்ற இடப் பெயர்வு, புலப் பெயர்வு இவற்றின் காரணமாக 1981இன் ஆரம்பத்தில் பிரான்சுக்கு வந்தேன். இங்கு வந்த பின்னர் திரு.பாலகிருஷ்ணன், திரு.ஏரம்பு ஆகியோருடன் பிரான்ஸ் தமிழர் இயக்கத்தில் இணைந்து செயற்பட்டேன். அந்த நேரத்தில் பாலகிருஷ்ணனின் ஆலோசனையின் கீழ் 'தமிழ்முரசு' என்னும் சஞ்சிகையை வெளியிட முனைந்தோம். அதற்கான வாழ்த்துக்களை தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரிடம் கேட்டிருந்தோம் அவர்கள் இந்த வாழ்த்துக்களைத் தருவதற்கு முன்பே 'எரிமலை' என்ற இதழை வெளியிட்டார்கள். இதனைத்தான் புஸ்பராஜா அவர்கள் பிரான்சில் முதல் வந்த பத்திரிகை என்றும், தொடர்ந்து வரும் பத்திரிகை என்றும் குறிப்பிட்டிருந்தார். ஆனால் முதல் என்பதற்கும், தொடர்ந்து என்பதற்குமான அர்த்தம் எனக்குப் புரிய வில்லை காரணம் 'எரிமலை' எப்போது வரும் எப்போது வராது என்று யாருக்கும் தெரியாது. ஆனால் 'தமிழ்முரசு' 1981ம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வந்த சஞ்சிகை. இதற்கான காரணங்கள் பலரின் தோள்மேல் இருந்தன.

பிரான்சில் தமிழர் அரசியல் சம்பந்தமான புஸ்பராஜா வின் பக்கங்களில் இவைகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருந்தன. 'தமிழ்முரசு' ஒழுங்காக வரவேண்டும் என்பதில் பாலகிருஷ்ணன், தர்மராசா ஆகியோர் காட்டிய அக்கறை, நான், தேவதாஸ், கலாமோகன், மற்றும் மனோ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போன்றோர் ஈடுபாட்டின் ஆர்த்மார்த்தம் ஒரு வித்தியாசமான தமிழ் சஞ்சிகையை கொடுத்தது. குறிப்பாக பலரின் உழைப்பில் வெவ்வேறு பட்ட விடயங்களைத் தாங்கிவந்த இந்த இதழ் பற்றி புஸ்பராஜா கிட்டத்தட்ட இருட்டடிப்புச் செய்தது ஒரு கவலைக்குரிய விடயமே.

அடுத்ததாக பிரான்சில் ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பாக வேலை செய்வதற்கு ஏற்கனவே ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் மத்திய குழு உறுப்பினரான சாந்தனும், ஜேர்மனில் இருந்து ஜோர்ஜ்ும் தொடர்பு கொண்டிருந்தார்கள். அப்படி இருந்தும் தமிழ் ஈழவிடுதலைப் பேரவை என்ற அமைப்பின் பெயரில் இயங்குவதுதான் நன்று என நான் நினைத்தே அதன் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் சார்பில்வந்த புஸ்பராஜாவோடு நான் பேசினேன். அதே சமயம் சிறீசபாரத்தினத்துடன் தனிப்பட்டரீதியில் நெருங்கிய நட்பு இருந்தது. இதே நேரத்தில் வரதராஜப்பெருமாள், யோகசங்கரியோடு பிரான்சுக்கு வந்திருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு இன்னுமொரு அரசியல் போதனை கிடைத்தது. காரணம் முதலில் புஸ்பராஜா அவர்கள் தனது புத்தகத்தில் சொன்னதுபோல, முத்துக்குமாரிடமும், ஜெயராஜாவிடமும் வரதராஜப்பெருமாளை ஒப்படைக்கவில்லை. வரதராஜப்பொருமாள் பெரும்பாலான நாட்கள் என்னோடுதான் தங்கினார் அது மட்டுமல்ல ஜெறா என்ற பிரெஞ்சு நண்பனின் துணையுடன் நாங்கள் சகல பத்திரிகை, அரசியல் அலுவலகங்கள் அனைத்துக்கும் சென்றோம்.வரதராஜப்பெருமாள் ஒரு சிறந்த அறிவாளி, சிறந்த பிரச்சாரகர், சிறந்த விரிவுரையாளர், அதே நேரத்தில் சிறந்த சோம்பேறியும்கூட. அவரிடம் நான் கற்றதுக் கொண்ட விடயங்கள் ஏராளம் ஐரோப்பாவில் எப்படி அரசியல் பிரச்சாரம் செய்வதென்பதை நான் அவரிடம் அக்குவேற ஆணிவேறாக கற்றுக் கொண்டேன். நானும் என் தோழர்களும் கிட்டத்தட்ட கூலிகளாக வேலைசெய்து ஒரு குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே தூங்குகிற நேரங்களில் கூட எங்களுள் அரசியல் ஆசையை புதைத்து விட்டார் அவர். அவைதான் விதையாகி பின்னர் விருட்சமாகின. புஸ்பராஜா அவர்கள் கொச்சைப் படுத்தியதுபோல ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரான்சுக் கிளையுள் எந்த நிழல் யுத்தமும் நடக்கவில்லை. எல்லோரும் தங்கள் கடமைகளை சரிவரச் செய்தார்கள். குறிப்பாக 'தமிழ்முரசு' சஞ்சிகையைப் பொறுத்த வரையில் நானும், தேவதாசும், கலாமோகனும் எங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்தோம். அதே நேரம் நிர்வாக வேலைகளை பாலகிருஷ்ணனும், தர்மராசாவும் மேற்கொண்டனர்.

சேரன், ஜெயபாலன், செழியன் போன்ற கவிஞர்களை புகலிடத்தில் அறிமுகப்படுத்தினோம் இது தவிர செல்வம், (காலம்) அருந்ததி போன்ற புதிய இன்னுமொரு தலைமுறையையும் உருவாக்கினோம். இவையெல்லாம் வரலாற்றில் எழுத்தில் பதியப்பட்ட உண்மைகள். இவை அனைத்தும் புஸ்பராஜாவால் இருட்டடிப்புச் செய்யப்பட்டது. தனது நூலில் இன்று தன்னை இலக்கியவாதியாகவும், வரலாற்று நாயகனானவும் காட்டிக்கொள்ளும் அவர்,ஈ.பி.ஆர் எல். எவ் இன் பிரச்சாரப் பீரங்கியாக வெளிவந்த 'தமிழ்முரசில்' ஒரு எழுத்தைத்தானும் எழுதவில்லை.

முதலாவது 'சங்கேமுழங்கு' பற்றி வெட்டி முழங்கும் புஸ்பராஜா அதில் தனது படத்தையும் பிரசுரித்த புஸ்பராஜா அதற்குப் பிற்பாடு நடந்த



'சங்கேமுழங்குகளில்' என்ன பங்கு வகித்தார். அதற்கு பிற்பாடு நடந்த 'சங்கேமுழங்கு' நிகழ்வுகள்தான் உண்மையான தோழர்களின் பங்களிப்புகள். அதில் குறிப்பாக நவாஜோதி, சாம்சன், கிறேகரி, எஸ்.கே. ராஜன், துரைஸ், இம்மானுவல் போன்ற பல கலைஞர்களின் பங்களிப்புடனும் நிகழ்ந்தது. பெருமளவு பெண்களை ஈர்த்த இன்றைய அரசியல், கலை, கலாச்சார நிகழ்விற்கும் வித்திட்ட நிகழ்வே 'சங்கேமுழங்கு'.

இதற்கிடையில் ஒரு இடைச்செருகள் நிக்ரகுவாவுக்கு நான்தான் உமாகாந்தனை அனுப்பினேன் என்று நூலில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இது ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் மத்தியகுழு எடுத்த தீர்மானத்தின்படி நானும் ஜேர்மனியிலிருந்து வின்சனும் நிக்ரகுவாவுக்கு செல்வதற்கான பிரயாண ஏற்பாடுகளைச் செய்தவர் பிரான்ஸ் செயற்குழுவின் பொருளாளராக இருந்த கோவை நந்தனே. இவ் ஏற்பாடுகளின் பின்னரேதான் புஸ்பராஜாவிற்கே இவ்விடயம் தெரியவந்தது. ஆனால் அவருடைய நூலில் தான்தான் என்னை அனுப்பினாரென்றும் இது பிரான்சின் செயற்குழுவிற்கு தெரியாது என்றும், என்னுடைய காதலிதான் உலகம்பூராப் பரப்பினாரென்றும் குறிப்பிட்டிருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய காதலிக்கும் (தற்போதைய மனைவி) தேவதாசனுக்கும் மட்டுமே எனது நிக்ரகுவா பயணம் தெரிந்திருந்தது. இத்தகையதான பொய்ச்சாட்சியங்களால் எதனை இவர் விரும்புகிறார். உமாகாந்தன், காதலி, இயக்கம் இவையெல்லாம் சுயசாட்சியத்தில் வரவேண்டிய அவசியம் இல்லை.

அடுத்தது எமது இந்தியப் பயணத்தின்போது என்னை மத்தியகுழு உறுப்பினரான சாந்தன் அவர்கள் இலங்கையில் தேர்தல் நடக்கவிருப்பதால் நீங்களும் வந்தால் நன்றாக இருக்கும் என்ற அழைப்பின்பேரில் என்னையும் அழைத்தார். இந்தியாவைப் பொறுத்தவரையில் ஒரு அன்பான சகோதரன் போலவே புஸ்பராஜா என்னோடு பழகியிருந்தார். மற்றும்படி அவர் குறிப்பிட்டிருந்ததுபோல் இலங்கைப் பயணத்தின்போது எந்தவித சிரமங்களையும் நாங்கள் எதிர்கொள்ளவில்லை. அடிக்கடி பெருமையுடன் இவரால் குறிப்பிடும் நபரான ஜெயராஜா யாழ்ப்பாணம் சென்றபின்னர் அம்மாவிடம் போவதாகக்கூறிச் சென்றவர் கடைசிவரை வரவே இல்லை. ஆனால் எனக்கு கொப்பிளிப்பான் வந்தபோது தோழர் நாபாவின் உத்தரவின்படியே நான் வீடு சென்றேன். வருத்தம் மாறியபின்னர் மீண்டும் யாழ்ப்பாண ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் அலுவலகத்தில் என்னாலான பணியை மேற்கொண்டேன். அதன்பின்னர் திருகோணமலையிலுள்ள அலுவலகத்திலும் நாபா, வரதன் உட்பட பலருடன் பணியாற்றினேன். நாங்கள் திருகோணமலையில் மக்கள் மத்தியில் வேலை செய்து கொண்டிருக்கும்போது புஸ்பராஜா அவர்கள் அவரது தொழில் (???!!!) நிமிர்த்தம் இந்தியா வந்துவிட்டார். அதனால் எமது வேலைகளை அவர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

பிரான்சைப் பொறுத்தவரையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். என்பது ஒரு தோழர்களின் அமைப்பு அது தோழமையான அமைப்பு. இங்கு நான் பெரியவன் நான் தலைவர் என்று யாருமே ஆளுமை செலுத்தமுடியாமல் வாடா, போடா என்று பழகும் தோழர்களின் அமைப்பு இது புஸ்பராஜாவிற்கு ஒத்து வராதது. இதனால் இங்கே ஈ.பி.ஆர்.எல்.எவ்.க்காக உண்மையாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேலை செய்த தோழர்களுக்கிடையில் முரண்பாடுகள் இருந்தாலும் அன்பு நட்பு இருந்தது. இதுவும் இவரால் சீரணிக்கமுடியாதது. கூட்டத்தில் சண்டைபிடித்தாலும் வெளியல தோளில் கை போடுகின்றார்களே!!! இதைப்பிரித்தாளுவது என்பது தெரியாதென்பதல்ல இவரால் முடியாது. ஏனென்று சொன்னால் நாம் எல்லோரும் நேர்மையாக ஒரு அமைப்புக்காக வேலைசெய்தோம். எல்லோரிடம் இருந்தும் பாடங்களைக் கற்றுக்கொண்டோம். கற்றவகைகளை விற்கவில்லை ஆனால் பகிர்ந்து கொண்டோம். என்னைப் பொறுத்தவரையில் பிரான்சில் ஈ.பி.ஆர்.எல்.எவ். என்ற வரையில் நான், கலாமோகன், எஸ்.கே.ராஜன், மனோ இவர்கள்தவிர முத்துக்குமார், தேவதாஸ், கிருபா, நாதன், சுந்தரலிங்கம் நந்தன், சிவதாஸ் போன்றவர்களெல்லாம் மறைக்கப்பட்டு, இருட்டடிப்புச் செய்யப்பட வேண்டியவர்களல்ல. ஆனால் எல்லோரும் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் சந்தர்ப்பவாதத்திற்கு என்று சொன்னால் அவை ஏற்றுக் கொள்ளப்படமுடியாதது..

இவர்கள் சிலருக்கான அகதி அந்தஸ்திற்கான சாட்சியங்களை நானே வழங்கியவனாக இருக்கும்போது, இவர்கள் அகதி அந்தஸ்து பெற்றதன்பின்பு ஒதுங்கிக் கொண்டார்கள் எனக் குறிப்பிடுவதற்கு புஸ்பராஜாவிற்கு அருகதையில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ். இல் நாபா உட்பட பதின்நான்கு தோழர்களின் கொலையின் பின்பான தலைமைப்பீடத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இனிமேல் ஈ.பி.ஆர்.எல்.எவ். இல் தன்னால் எந்த ஆதிக்கமும் செலுத்தமுடியாது என்ற நிலைமையில் ஐராப்பியாவில் புலிகளின் ஆதிக்கம் அதிகரித்தபடியால் தன்னுடைய தனிப்பட்ட நலன்கள் காரணமாய் தன்னுடைய முகத்தை மாற்றிக் கொண்டார்.

இறுதியாக பிரான்சில் சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்களினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் கொடுக்கமுடியாது வெளியேறினார். இவரது நடவடிக்கைகள் தொடர்பாக அதிருப்தி அடைந்த தலைமை இவரது அனைத்துப் பொறுப்புக்களிலும் இருந்தும் விலகுமாறு கட்டளையிட்டது. இதன்பின்பு தன்னை ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் நண்பனாகவும்!!! புலிகளின் நண்பனாகவும்!!! காட்டிக்கொள்வது அர்த்தமற்றது. ஒரு மனிதனுக்கு ஒரு முகம் போதுமானதே!!! பல முகங்கள்!!! தேவையில்லை.

யுத்தம் யாருடனும் செய்யலாம்
புத்தகம் யாரும் வெளியிடலாம்
ஆனால் எழுத்து எந்த நேரமும்
இறுக்கமாக இதயத்தில் இருக்கும்
எமது தோழர்கள் எமது நண்பர்கள் அப்படித்தான்.

◆



## கோவை நந்தன்

# எழுதப்பட்ட பொய்களும்... எழுதப்படாத உண்மைகளும்...

*« ஒரு தலைவன் என்பவன் தானாகவே பிறந்திடவோ, ஆகாயத்தில் இருந்து குதித்திடவோ முடியாது அவன் மக்களில் இருந்து தோன்ற வேண்டியவன் »*

திரு.புஸ்பராஜா அவர்களின் 'வரலாற்று' நூலென அவராலேயே புகழப்படும் தனது சுயபுராணத்தையும், ஏனையோர் மீதான சேறடிப்புகளையும் தாங்கிய 'ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்' என்ற அவரது நூல் தொடர்பான ஒரு சில கருத்துகளையும், புஸ்பராஜா அவர்களின் செயற்பாடுகளை, தமிழ் இளைஞர் பேரவை, முன்னைய தமிழ்ஈழ விடுதலை இயக்கம், பிரான்சில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி ஆகியவற்றில் நானும் பங்காற்றியதனாலான அனுபவங்களுடன் சில உண்மைத் தகவல்களை வெளிப்படுத்துவது, வாசகர்களுக்கு தெளிவு ஏற்படும் என்பதனால் இதனை வரைகிறேன்.

நூலின் முன்பக்கத்தில் 'இளைஞர் பேரவை' தொடர்பாகவும், 'தமிழ் ஈழ விடுதலை இயக்கம்' தொடர்பாகவும் கூறியவற்றின் உண்மை, பொய்கள் பற்றி இந்த இரு அமைப்புகளுடனும் ஆரம்பகாலம் முதல் ஓரளவிற்கு இணைந்து செயல்பட்டவன் என்ற வகையில் சில கருத்துக்களை தெரிவிப்பதும் எனது கடமையாகிறது. என்னைப் பொறுத்த வரையில் தமிழ் இளைஞர்பேரவை என்ற அமைப்பு ஆரம்பம் முதல் இறுதிவரை தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஊதுகுழலாகவே இயங்கி

www.tamilarangam.net



வந்திருக்கிறது. இளைஞர் பேரவையின் கூட்டங்கள் முதல் அனைத்து நடவடிக்கைகளும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மேற்பார்வையிலேயே நடைபெற்றிருக்கின்றன. தமிழ் இளைஞர் பேரவையானது த.வி.கூட்டணியின் ஓர் அங்கமாகவும், அதன் கட்டுப்பாட்டிலேயுமே இயங்குகிறதென்பதில் வெறுப்படைந்த பல இளைஞர்கள், புஸ்பராஜா உட்பட இளைஞர் பேரவை யிலிருந்து பிரிந்து தமிழ்ஈழ விடுதலை இயக்கம் என்கின்ற புதிய அமைப்பு ஒன்றை உருவாக்குகின்ற நிலைமை ஏற்படும் அளவிற்கு இளைஞர் பேரவை கூட்டணியின் கீழ் இயங்கிவந்திருக்கின்றது.

இளைஞர் பேரவையின் அனைத்து கூட்டங்களும் த.வி. கூட்டணி யின் காரியாலயங்களிலும், த.வி.கூட்டணித் தலைவர்களின் இல்லங்களிலுமேயே நடை பெற்றிருக்கின்றன. புஸ்பராஜா உட்பட இளைஞபேரவையின் மேல்மட்டத்தவர்கள் அனைவரும் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பஸ், ரயில் பாஸ்களிலேயே இலவசமாக பயணித்திருக்கிறார்கள். கடிதங்கள்கூட கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் இலவச கடித உறைகளிலேயே அனுப்பப்பட்டன. கூட்டணித் தலைவர்களின் வாகனங்கள் (ஜீப்வண்டிகள்) முக்கிய நிகழ்வு களின்போது இவர்களால் பாவிக்கப்பட்டிருக்கின்றன. அனைத்துக்கும் மேலாக சிறீலங்கா அரசுக்கெதிராக இளைஞர் பேரவையின் பெயரில் மேற்கொள்ளப்பட்ட பகிஸ்கரிப்பு போராட்டங்களுக்கெல்லாம் திட்டமிடுவதும் அதற்கான துண்டுபிரசுங்களை தயாரித்து வெளியிடுவதும் தமிழர் விடுதலைக் கூட்டணியிரேதான். இப்படியாக கூட்டணியினரால் தயரிக்கப்பட்டு, இளைஞர் பேரவையின் பெயரில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை புஸ்பராஜா வுடன் இணைந்து நானும், யாழ்ப்பாணத்தின் பல்கலைக்கழகங்களிலும் விநியோகித்ததை புஸ்பராஜா மறந்திருக்கமாட்டார் என எண்ணுகிறேன்.

இளைஞர் பேரவையின் ஆரம்பக் கூட்டத்தின்போது மாவை சேனாதிராஜா அழையாமல் வந்ததாகவும் சேனாதிராஜா அவர்களே இளைஞர் பேரவை என பெயர் வைக்கலாம் என ஆலோசனை வழங்கியதாகவும் தனது நூலில் தெரிவித்திருக்கும் புஸ்பராஜா ஏனைய கூட்டணியிருடனான தொடர்பு பற்றி எழுதாமல் விட்டது ஏனென்று தெரிவிப்பாரா?

பாராளுமன்ற கனவுகளுடன் செயற்பட்டு வந்த இவர் தன்னை ஒரு முழு-நேர விடுதலைத் தியாகியாக சித்தரித்து வளர்த்துள்ள 'நாவல்' (!!!) உண்மையிலேயே சுவாரசியமாகத்தான் இருக்கிறது. திரு. அமிர்தலிங்கம் அவர்களுக்கு விசுவாசமாக இவர் செயல்பட்டதன் பிரதிஉபகாரம்தான் அமிர்தலிங்கம் அவர்களால் இவருக்கு வழங்கப்பட்ட 'கமநல அதிகாரி' **(CULTVATION OFFICER)** என்ற பதவியாகும். 1977 ம் ஆண்டிலிருந்து 1981ம் ஆண்டு இவர் நாட்டை விட்டு வெளியேறும்வரை அமிர்தலிங்கம் அவர்களால் வழங்கப்பட்ட கமநல அதிகாரியாகவே இருந்து ஒரு அரசு ஊழியனாகவே நாட்டை விட்டு வெளியேறிய புஸ்பராஜா அவர்கள், உண்மை இப்படியிருக்க தான் இலங்கையைவிட்டுவெளியேறிய போது இன்னல்களுக்கு மத்தியில் வெளியேற வேண்டிவந்ததாகவும், பின்னர் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த வேளை கொழும்பு சென்ற போது மிகவும் பயத்துடனேயே சென்று வந்ததாகவும் குறிப்பிடும் இவரின்



நூலை பக்கம் பக்கமாக ஆராய்ந்தால் வரலாறு தெரிந்தவர்களும், வரலாற்றில் நேரடியாக பங்கு கொண்டவர்களும் எத்தனை உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன, எத்தனை பொய்கள் இணைக்கப்பட்டடுள்ளன என்பதை நிச்சயம் புரிந்துகொள்வார்கள்.

மேலும் புஸ்பராஜா தனது நூலில் நான் ஒரு கடத்தல்காரன் என்கிற பிரமையை ஏற்படுத்தும் வகையில், என்மீதான காழ்ப்புணர்வின் வெளிப்பாடாக எழுதப்பட்டது தொடர்பாக எனது விளக்கத்தை தருவதும், பொய்களையும், உண்மைகளையும் பிரித்தறியும் வாய்ப்பை வாசகர்களுக்கு இலகுவாக்கும் என்பதாலும் அதனை தெளிவு படுத்துகிறேன்.

பிரான்சில் ஈ.பி.ஆர்.எல்.எவ்.இன் உத்தியோக பூர்வமான ஒரு பிரிவு 1984 ம் ஆண்டின் பிற்பகுதியில் தலைமைப்பீடத்தில் இருந்து வருகை தந்திருந்த திரு.வரதராஜப்பெருமாள், லண்டன் யோகசங்கரி ஆகியோராலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டது. பலவாரங்கள் பிரான்சில் தங்கி இருந்த இவர்கள் இருவரும் தமிழ் ஈழவிடுதலைப் பேரவையை சேர்ந்த உமாகாந்தன், முத்துக்குமார், சிவதாஸ் மற்றும் ஜெயராஜா, ஸ்ரீ.செயோன், குலட், புஸ்பி, கணேசமூர்த்தி உட்பட மேலும் பலருடன் தொடர்பு கொண்டு பரப்புரைகளை மேற்கொண்டதன் வெளிப்பாடே பிரான்சில் ஈ.பி.ஈஆர்.எல்.எவ். ஆகும். இந்தவேளையில் நானும் இவர்களுடன் இணைந்து செயலாற்றியவன் ஆகும். திரு. வரதராஜப்பெருமாளும், யோகசங்கரியும் நம்மவர்கள் மத்தியில் மட்டுமன்றி முத்துக்குமார், உமாகாந்தன் ஆகியோருடன் இணைந்து சர்வதேச விடுதலை இயக்கங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பிரான்ஸ் வெளிநாட்டமைச்சின் அதிகாரிகள் ஆகியோரையும் தொடர்ச்சியாக சந்தித்து எமது போராட்ட நியாயங்களை வெளிப்படுத்தியவர்கள் என்பதை நான் நேர-டியாக அறிந்தவன். ஆனால் இந்த வேளையில் புஸ்பராஜா அவர்கள் பிரான்சில் இல்லை தனது தனிப்பட்ட வேலை காரணமாக இந்தியா சென்று விட்டதாக தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். இவரது தனிப்பட்ட வேலை என்ன (!!!) என்பது எமக்கு நன்றாகவே தெரியும் (இதுவும் ஒரு கடத்தல் என்றால் நானும் சேறடித்தவன் ஆகிவிடுவேன்)

பிரான்சில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் முதல் கூட்டம் நான் அப்போது தங்கியிருந்த நண்பர் புஸ்பியின் (ஜோர்டான் மெத்றோ) வீட்டில் நடை பெற்றது. அப்போது தமிழ் ஈழ விடுதலைப்பேரவையை சேர்ந்த ஒரு சாரார் எம்முடன் இணைந்து வேலை செய்வது தொடர்பாக முடிவாகவில்லை. இந்தக் கூட்டத்தில் நான், முத்துக்குமார், ஜெயராஜா, கணேசலிங்கம், புஸ்பி, குலம், ஸ்ரீ.செயோன் உட்பட பலர் கலந்து கொண்டோம். இந்தக் கூட்டத்தில் தான் நானும், புஸ்பியும் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் பிரான்ஸ் பிரிவின் நிதிப் பொறுப்பை கவனிப்பதற்காக வரதராஜப்பெருமாளால் நியமிக்கப்பட்டோம். இந்தக் கூட்டத்திலும் புஸ்பராஜா இல்லை. அன்றைய தினத்தில் இருந்து, நிதிப் பொறுப்பிலிருந்து நானாக விலகும்வரை நானே அந்தப் பொறுப்பில் இருந்தேன். முதலாவது கூட்டத்தின் பின்னர் தமிழ் ஈழ விடுதலைப் பேரவையைச் சேர்ந்த பலரும், அதன் அலுவலகம் உட்பட அனைத்துப் பொருட்களும் எம்முடன் இணைக்கப்பட்டன. இந்த இணைப்பிற்கான முழு வேலைகளையும் மேற்கொண்டவர்கள் வரதராஜப்பெருமாளும், யோகசங்கரியுமேயாகும். இந்த இணைப்பின் பின்னர் தமிழ் ஈழவிடுதலைப் பேர

www.tamilarangam.net



வையின் நிதிப் பொறுப்பை கையாண்டு கொண்டிருந்த பாலகிருஸ்ணனுடன் இணைந்து நிதி தொடர்பான வேலைகளை நான் கையாண்டு வந்தேன். மிகவும் ஒழுங்காகவும், நேர்மையாகவும் அமைப்பு செயல்பட்டுக் கொண்டிருந்தது. 'தமிழ்முரசு' சஞ்சிகை வெளியீடு, 'சங்கேமுழங்கு' நிகழ்ச்சி, கறுப்பு யூலை, கொடித்தினம், இயக்கப் பிரச்சாரம், இயக்க நிதி சேகரிப்பு, தொலை பேசிச்சேவை என்பன இந்த காலகட்டத்தில் மிகவும் நேர்த்தியாக அனைத்து உறுப்பினர்களின் பங்களிப்புகளுடன் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. புஸ்பராஜா அவர்களும் எம்முடன் இணைந்த ஒருவராகவே எண்ணப்பட்டு செயல்பாடுகள் நடை பெற்றன. இந்த வேளையில் முன்னைய தமிழர் விடுதலைக்கூட்டணிக்(தமிழ் இளைஞர்பேரவை) குணாம்சத்துடன் தன்னை முன்னிலைப் படுத்தி செயல்பட புஸ்பராஜா மேற்கொண்ட முயற்சிகளே ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் பிரான்ஸ் பிரிவு பின்னர் செயல்பட முடியாமலேபோய், அலுவலகம் மூடப்பட்டு பலரும் ஒதுங்கிக் கொண்டதற்கும் இதுகாரணமாக அமைந்தது என்பதை எம்முடன் இணைந்து செயல்பட்ட எவருமே மறுக்கமாட்டார்கள்.

எம்மால் நடாத்தப்பட்ட சங்கேமுழங்கு நிகழ்ச்சியின் மூன்றாவது நிகழ்ச்சி என நினைக்கிறேன் அதற்காக லண்டன் நகரிலிருந்து ஈ.பி.ஆர்எல்.எவ். இன் மத்திய குழு உறுப்பினரான சாந்தன் அவர்கள் இங்கே (பிரான்ஸ்) வந்திருந்தார். சங்கேமுழங்கு நிகழ்ச்சி முடிந்த மறுநாள் எமது உறுப்பினர்கள் அனைவரையம் ஒன்றாக சந்தித்து இயக்க செயல்பாடுகள் பற்றிய ஒரு கொள்கை விளக்க கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டம் முடிவடைந்த பின்னர் சாந்தன் அவர்கள் என்னுடனும் உமாகாந்தன் போன்ற ஒரு சிலருடனும் கதைத்துக் கொண்டிருந்தபோது கூறிய ஒரு விடயம் எமக்கு வியப்பையும், வேதனையையும் ஏற்படுத்தியது. திரு. புஸ்பராஜா அவர்கள் இந்தக் கூட்டத்தின் முன்னிலையில் தன்னை ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் பிரான்ஸ் பிரதிநிதியென (REPRESENTATIVE) அறிவிக்கும்படி பல முறை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதாகவும் அதனை சாந்தன் தட்டிக்கழித்து விட்டதாகவும் சாந்தன் அவர்களே எம்மிடம் தெரிவித்தார்.

அடிக்கடி தொழில்(!!!) நிமிர்த்தம் (தொழில் கடத்தலினுள் அடங்காது) இந்தியா சென்று வரும் புஸ்பராஜா தங்கள் வாழ்வையே அர்பணித்து செயல்பட்டு வந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் தலைமைப்பீட உறுப்பினர்களுடன் குறிப்பாக நல்ல மனிதனாகவே இறுதிவரை வாழ்ந்து மடிந்த தோழர் நாபாவுடனுமான தனது தொடர்பை தவறாக எண்ணப்படுத்தி தான், தான் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் பிரான்சிற்கான ஏக பிரதிநிதி, தனக்குக் கீழ்பட்டுத்தான்இங்கே அனைத்து செயல் பாடுகளும் அமைய வேண்டும் என்ற பதவி ஆசையின் வெளிப்பாடுதான் சாந்தன் அவர்களை தன்னை பிரதிநிதியாக அறிவிக்க வேண்டும் என்ற வற்புறுத்தல் ஆகும். ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் ஜனநாயக கோட்பாடு, விமர்சனம், சுயவி-மர்சனம், இடதுசாரி சிந்தனைகள் என்பன வற்றால் கவரப்பட்டு இங்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்காக செயல்பட்டவர்கள் அனைவருமே சமமானவர்கள் என்ற தோழமை உணர்வுடன் செயல்பட்டுவந்த அனைவருக்குமே, புஸ்பராஜாவின் தன்னை முன்னிலைப் படுத்துகின்ற போக்கும் தனக்கு கீழ்தான் அனைத்தும் நடக்க வேண்டும் என்கின்ற சர்வாதிகார எண்ண செயல்பாடுகளும் ஒரு காழ்ப்புணர்வை இவர் மீது ஏற்படுத்தியது.



இந்த இவரது எண்ண செயல்பாடுகள் இவரது நூலிலேயே வெளிப்படுத்தப்பட்டிருப்பதை காணலாம். ( அனைத்தும் தான் தான் செய்தேன் என்கிற வாக்குமூலம்)

இப்படி ஏற்பட்ட காழ்ப்புணர்வுடனும் கூட இயக்கம் வளரவேண்டும் என்ற பொது நோக்குடன் செயல்பட்டு வந்த எமக்கு திடீரென ஒருநாள் இயக்க அலுவலகத்தில் இயக்க பொது கோப்பில் (FILE) சேர்க்கப்பட்டிருந்த ஒரு கடிதம் மேலும் வெறுப்பை ஏற்படுத்தியது. அலுவலகத்தில் இருந்த இயக்க கோப்பில் சேர்க்கப்பட்டிருந்த அந்த கடிதம் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் தலைமைப்பீட கடித தலைப்பில் (LETER HEAD) எழுதப்பட்டிருந்தது. இயக்கத்தின் மத்திய குழு சார்பாக,மத்திய குழு உறுப்பினராக அன்று இருந்த குன்சி தோழரால் எழுதப்பட்டிருந்த அக்கடிதத்தில். திரு. புஸ்பராஜா அவர்களே ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் உத்தியோகபூர்வ பிரதிநிதி (OFFICIEL RERPRESENTIVE) எனவும், பிரான்சில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இற்கு வேலை செய்பவர்கள் அனைவரும் புஸ்பராஜாவின் தலைமைத்துவத்தின் கீழ்தான் வேலை செய்ய வேண்டும் என்ற சார்புபடவும் எழுதப்பட்டிருந்தது.

ஒரு தலைவன் என்பவன் தானாகவே பிறந்துவிடவோ, ஆகாயத்தில் இருந்து குதித்து விடவோ முடியாது. அவன் மக்களிலிருந்து தோன்ற வேண்டியவன். மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டியவன். ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற ஜனநாயக கட்டுக்கோப்புள்ள அமைப்பினுள்ளும் புஸ்பராஜா போன்றவர்களால் ஏற்படுத்தப்பட்ட இப்படியான குளறுபடிகளும், அராஜகப்போக்கும் தான் இயக்கம் முற்று முழுதாகவே சிதைந்து போக காரணமானது எனலாம்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் பிரான்ஸ் கொமிட்டிதான் ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரான்ஸ் பிரிவு, அதில் வேலை செய்யும் அனைவரும் சமத்துவமான தோழர்கள் என்ற உணர்வடன் விசுவாசமாக செயல்பட்டுக் கொண்டிருந்த அனைவருக்குமே, புஸ்பராஜாவின் செயல்பாடுகள் வெறுப்பை ஏற்படுத்தி பிரான்ஸ் கொமிட்டிக்கும் ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்தியது. புஸ்பராஜாவின் இந்த போக்கை நான் நேரடியாகவே கண்டித்தேன். பாலகிருஸ்ணன், தேவதாஸ், எஸ்.கே.ராஜன், மனோ போன்றவர்களும் தெரிவித்தார்கள். பல எதிர்புகளுக்கு மத்தியிலும் புஸ்பராஜா தான் தோன்றித்தனமாகவும், தனக்கு விசுவாசமாக இருந்தவர்களை முன்னிலைப் படுத்தும் சர்வாதிகாரப் போக்குடனுமேயே செயல்பட்டார். இதன் வெளிப்பாடே என்மீது பவுண் கடத்தல்காரன் என்ற பட்டம் சூட்டி என்னையும் நிதிப் பொறுப்பிலிருந்து நீக்கி விட்டு தனது 'கைத்தடியாக' செயல்பட்ட ஜெயராஜாவை நிதிப் பொறுப்புக்கு நியமிக்க முற்பட்டமை ஆகும். இதனை கொமிட்டியின் பெரும்பான்மையினர் எதிர்க்க புஸ்பராஜாவால் கொண்டுவரப்பட்ட இந்த தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. இவற்றால் மனமுடைந்த நான் பின்னர் நானாகவே நிதிப் பொறுப்பில் இருந்து ஒதுங்கிக் கொள்ள புஸ்பராஜா விரும்பிய ஜெயராஜாவே நிதிப் பொறுப்பிற்கு நியமிக்கப்பட்டார்.

www.tamilarangam.net



இப்படி புஸ்பராஜாவால் நிதியாளராக நியமிக்கப்பட்ட ஜெயராஜா பின் நாளில் இயக்கம் பிரான்சில் இழுத்து மூடப்படுகின்ற நிலை ஏற்பட்டபோது இரவோடு இரவாக கணக்கு எதுவும் முடிக்கப்படாமல் அலுவலகத்தில் கணக்கு கோப்புகளை வைத்துவிட்டு சென்றதும், பின்னர் பாலகிருஸ்ணன் அவர்களே அனைத்தையும் எடுத்து இறுதி கணக்குகளை சரிவரமுடித்து புஸ்பராஜா, ஜெயராஜா உட்பட அனை-வருக்கும் அனுப்பிவைத்தார் என்பதுதான் உண்மையான, யாவரும் அறிந்த வரலாறு. வரதராஜப்பெருமாளால் நான் இயக்கத்தினுள் சேர்த்துக் கொள்ளப்பட்டபோதே, அதாவது நிதிப்பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டபோதே பிரான்சில் நான் தொழில்ரீதியாக வியாபாரி யாகவே இருந்தவன். நானும் பங்குதாரராக இருந்த கடை ஒன்றும் அன்று பாரிசில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இதை எல்லாம் தெரிந்தே வரதரா ஜப்பெருமாள் என்னை இயக்கத்தினுள் இணைத்துக் கொண்டார். ஏற்கனவே தொழில் ரீதியாக வியாபாரியாக இருந்த எனக்கு இயக்கத்தை பாவித்துத்தான் தொழில் எதனையும் செய்ய வேண்டிய தேவை எதுவும், எப்பவும் இருந்ததில்லை.

தலைமைப்பீடத்திற்கு வானொலிச் சேவை நடத்துவதற்கான உபகரணங்களை ஐரோப்பாவில் இருந்து இந்தியாவிற்கு எடுத்து செல்ல வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டது. இந்த பொறுப்பு எமது பிரான்ஸ் கொமிட்டியின் முன் லண்டன் சாந்தனாலும், யோகசங்கரியாலும் முன்வைக்கப்பட்டது. அடிக்கடி எனது தொழில் நிமித்தம் இந்தியா சென்று வரும் எனக்கு அந்த வேளையிலும் இந்தியா செல்லும் தேவை இருந்தது. எனது பயணத்தை இயக்கம் சாதகமாக பயன்படுத்திக் கொள்ளலாமே என்ற எண்ணத்துடன், வானொலி உபகரணங்கள் எடுத்து செல்வதெற்கென தனியான விமான பிரயாண செலவை இயக்கத்திற்கு தவிர்பதற்காக நான் போகும் போது என்னுடன் அந்த பொருட்களை எடுத்துச் சென்று இந்தியா வில் ஒப்படைக்கிறேன் என தெரிவித்தேன். இந்த கருத்து பிரான்ஸ் கொமிட்டியில் முன்வைக்கப்பட்டு தீர்மானமாகவே நிறைவேற்றப்பட்டது. தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரே நான் வானொலி உபகரணங்களை எடுத்துச் செல்வதற்கான வேலைகளில் இறங்கினேன்.

வானொலி உபகரணங்கள் பேர்லின் நகரில் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிவந்த எமது தோழர் வில்சன் அவர்களிடம் இருந்தது. (இவை ஜேர்மனியிலும், சுவிசிலும் கொள்வனவு செய்யப்பட்டவை) நான் நேரடியாகவே பேர்லின் சென்று வில்சன் அவர்களுடன் இணைந்து இந்த உபகரணங்களை எடுத்துக் கொள்வதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டோம். எமது இருவரினதும் திட்டத்தின்படி பொருட்களில் அரைவாசியை பிரான்சில் எடுத்துவந்து இங்கிருந்து அரைவாசிப் பொருட்களை நானும் மிகுதி அரை-வாசி பொருட்களை வில்சன் பேர்லினிலிருந்தும் எடுத்துகொண்டு புறப்படுவதாகவும் இருவரும் மொஸ்கோ விமான நிலையத்தில் சந்தித்து அங்கிருந்து சிங்பூர் வழியாக சென்னைக்கு கொண்டுபோவது எனவும் நாம் திட்டம் போட்டு அதன்படி செயல்பட்டோம். (முழுப்



பொருட்களும் பெறுமதி மிக்கதாக இருந்ததால் இங்கு சுங்க இலாகா கெடுபிடிகளை தவிர்பதற்காகவே இரண்டு இடங்களில் இருந்து எடுத்துச் செல்வதாக தீர்மானிக்கப்பட்டது.) இதன் பிரகாரம் ஐந்து மிகவும் பெரிய பாரமான பெட்டிகளை எடுத்துக்கொண்டு நான் தனியாக புகையிரதம் மூலம் பிரான்ஸ் வந்து கொண்டிருந்தபோது பிரான்ஸ் சுங்க இலாக விசாரணை, சோதனை கெடுபிடிகளுக்கு ஆளாகி நடுச்சாம வேளை இடை நடுவில் உள்ள எல்லைப் புகையிரத நிலையத்தில் மிகவும் பாரமான ஐந்து பெட்டி பொருட்களுடனும் இறக்கப்பட்டேன்.

இரவு பூராக பொலிஸ் நிலையத்தில் குளிருக்கு மத்தியில் தடுத்து வைக்கப்பட்ட நான் மறுநாள் காலை பொருட்களுக்கான ஆவணங்களை காட்டி பொருட்களை எடுத்து செல்வது என்ற நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டேன. பொருட்கள் தடுத்து வைக்கப்பட்டன சுங்க இலாகாவால். நான் அங்கிருந்து பலத்த சிரமத்தின் மத்தியில் பாரிஸ் வந்து இங்குள்ளவர்களிடம் விபரத்தை தெரிவித்து இரண்டாவது நாள் நானும், பாலகிருஸ்ணனும், தேவதாசனும் எனது வாகனத்தில் மீண்டும் பெல்ஜிய எல்லைக்கு சென்று உரிய ஆவணங்களை சமர்பித்து பொருட்களை மீட்டுவந்தோம். பின்னர் இங்கிருந்து நான் அவற்றை விமானமூ லமாக எடுத்து செல்ல தோழர் வில்சன் பேர்லினிலிருந்து மிகுதிப் பொருட்களை எடுத்துவர இருவரும் மொஸ்கோ விமான நிலையத்தில் சந்தித்து சிங்கப்பூர் வழியாக சென்னை சென்று வானொலி உபகரணங்கள் அனைத்தையும் பாதுகாப்பாக தலைமைப் பீடத்திடம் ஒப்படைத்தோம். இந்த செயல்பாடுகளின்போது எந்தவிதமான நேரடி பங்களிப்பும் செய்ததாக மட்டுமல்ல, இந்தியா சென்றபோது நான் பவுண்கடத்தியதாக என்மீது கடத்தல்காரன் என்ற சேறடிப்பையும் தனது நூலில் செய்திருக்கின்றார் புஸ்பராஜா. வானொலி உபகரணங்களை சென்னை விமான நிலையத்திலிருந்து எதுவித சுங்க சோதனையும் இன்றி வெளியே எடுத்து செல்ல 'றோ' அதிகாரிகளினூடாக தலைமைப்பீடம் ஒழுங்குகளை செய்திருந்தது. உபகரணங்களுடன் சென்ற எமக்கும் எதுவித சோதனையும் செய்யப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால் அந்த வேளையில் நான் வழமையாக இந்தியா செல்லும் போது எனது செலவுக்காக எடுத்து செல்லும் ஒரு சங்கிலி மட்டுமே என் கழுத்தில் இருந்தது. இதைத்தான் எம்மை சென்னை விமான நிலையத்தில் வந்து அழைத்து சென்ற தோழர் சாந்தன் சொன்னதாக கூறி புஸ்பராஜா என்மீது நடவடிக்கை எடுக்க முனைந்ததாகும். என்மீது இவரால் சுமத்தப்பட்ட அபாண்டமான குற்றம் நியாயமான எனது விளக்கத்தை தொடர்ந்து எமது பிரான்ஸ் கொமிட்டியால் தோற்கடிக்கப்பட்டது.

எனது சொந்த தேவைக்காக எனது சொந்த செலவில் இந்தியா சென்ற நான் போகும்போது வானொலி உபகரணங்களையும் எடுத்து சென்றதற்காக எனது தேவைக்கான சங்கிலியை எடுத்து சென்றது குற்றம் என்றால், நண்பர் புஸ்பராஜாவும் விடுதலைப்புலிகளின் அன்றைய முக்கியஸ்தரும் இவரது ஆருயிர் நண்பருமான சூரி என அழைக்கப்படும் சூரியகுமாரும் இணைந்து மேற்கொண்ட கடத்தல்களின்போது இவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன்ஊடாக கிடைத்த 'றோ' அதிகாரிகளின் தொடர்புகளை

www.tamilarangam.net



பயன்படுத்தியதை எந்த வகையில் நியாயப் படுத்தப்போகிறார். இவை பற்றி எல்லாம் இவரது சாட்சியத்தில் எந்தப் பக்கத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

என்மீதான கடத்தல் குற்றச்சாட்டு முறியடிக்கப்பட்டபின் இவரது குற்றச்சாட்டு தொடர்பாக தலைமைப்பீடத்தின் கருத்தை அறிவதற்காக புஸ்பராஜாவின் முன்னிலையிலேயே சென்னைக்கு தொடர்புகொண்டு கதைத்தோம். அப்போது அங்கு இருந்த மத்திய குழு உறுப்பினர் தோழர் குன்சி எனது செயல்பாட்டில் எந்த தவறும் இருப்பதாக தான் கருதவில்லை என இவர் முன்னிலையிலேயே கூறினார். இது கூட இவரதுசாட்சியத்தில் மறைக்கப்பட்டுவிட்டது. நான் முன்னர் குறிப்பிட்ட புஸ்பராஜாவால் எமது அலுவலக கோப்பில் (FILE) வைக்கப்பட்ட 'அவர்தான் பிரான்ஸ் பிரதிநிதி' என்ற கடிதம் தொடர்பான ஒரு உண்மையையும் நான் இங்கே தெரியப்படுத்த வேண்டியது தேவையிருக்கின்றது. ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் பிரான்ஸ் பிரிவினுள் ஏற்பட்ட சிக்கல்கள் தலைமைப் பீடத்திற்கும் ஓரளவு தெரிய வந்தவேளை நான் ஒரு முறை சென்னையில் நின்ற போது எமது செயலாளர் நாயகம் தோழர் நாபா அவர்கள் என்னை அலுவலகம் வருமாறு பணித்து இங்கு என்ன நடக்கிறது? என்ன சிக்கல்கள்? என வினாவினார். நான் நேர-டியாகவே இங்குள்ள நிலைமைகளையும் புஸ்பராஜாவின் போக்கு பற்றியும் கூறி விட்டு நீங்கள் தலைமைப் பீடத்திலிருந்து கொடுத்த புஸ்பராஜா தான் பிரான்ஸ் பிரதிநிதி என குறிப்பிட்ட கடிதம் தான் சிக்கல்கள் பெரிதாவதற்கு காரணம் என கூறினேன். அப்போது தோழர் நாபா அவர்கள் அப்படி ஒரு கடிதமும் நான் கொடுக்கவில்லை எனக்கூறினார். தோழர் குன்சியின் கையொப்பத்துடன் அந்தக்கடிதம் இருந்தது என நான் தோழர் நாபா விடம் சொல்ல «அப்படியா எனக்கு அதுபற்றி எதுவும் தெரியாது» எனக்கூறினார். ஆக ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் செயலாளருக்கு தெரியாமல் மத்திய குழுவுக்கு அறிவிக்காமல் தனக்கு சாதகமான தோழர் குன்சியிடம் இருந்து கடிதத்தை பெற்றுக் கொண்டு வந்து தன்னை நிலை நிறுத்தும் அளவுக்கு திரு.புஸ்பராஜாவின் பதவி ஆசை இருந்திருக்கிறது...!!▲

**«இன்றுள்ள நிலையில் தமிழர்களை வென்றெடுக்க நாங்கள் தந்திரோபாயமாக தேசிய இனப் பிரச்சனையை முன்வைக்கலாம் ஆனால் அது தந்திரோபாயம் என்ற இணக்கத்துக்குள் அடங்காமல் சந்தர்ப்பவாதமாகியும் விடக்கூடும். பொதுவான ஒரு மயக்கம் உலகெங்குமுள்ள தமிழர்களிடம் இருக்கிறது இங்கு நடைபெறும் ஆயுதந்தாங்கிய போராட்டம் முற்போக்கு பக்கத்திற்கே இழுபாடுடையது என்று! ஒரு விசயத்தை நாம் பொதுவில் கவனிக்க வேண்டும். ஆயுதம் தாங்கிய போராட்டமெல்லாம் முற்போக்குடையதுதானா என்பதனை?»**

**கே. டானியல் (30-10-1983) (தொகுப்பு அ.மார்க்ஸ்)**
**நன்றி- தொகுப்பு- அ.மார்க்ஸ்**



தேவதாசன்



# சாட்சிப்பிரதிமீதான வாசிப்பும்-மேன்முறையீடும்...

«ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்» என்னும் தலைப்பில் சி.புஸ்பராஜா அவர்களால் வெளியிடப்பட்ட 632பக்கங்களைக் கொண்ட நூலை நானும் படிக்க நேர்ந்தது. «ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்» என்னும் வரலாற்றில், தன்னை ஒரு நாயகனாக உருவகப்படுத்தியுள்ளார். இவ்வரலாற்று நூலை படித்த பொழுது இதற்கான சில விமர்சனங்களை பதிவு செய்வேண்டிய கட்டாயத்தை உணர்ந்ததன் மூலமாக, இவர் நூலில் நான் காணும் சமூக-அரசியல் முரண்பாடுகளையும், இவருடன் கட்சிவேலைகளில் ஒன்றாய் பங்காற்றியவன் என்றவகையில் புஸ்பராஜா அவர்களது நூலோடு, அவர்சார்ந்த- சமூக-அரசியல்-பார்வை பற்றி எனது அபிப்பிராயத்தையும் இங்கே முன்வைக்கிறேன்.

தனது தந்தை தமிழரசுக் கட்சி மீது கொண்ட பற்றின் காரணமாக தன்னையும் அதில் இணைத்துக் கொண்டு செயல்பட ஆரம்பித்ததாக துவங்கி, பிரான்சில் நடைபெற்ற அமிர்தலிங்கத்தின் பவள விழா வரை இவருடைய சாட்சியம் அமைந்திருக்கிறது. இப்புத்தகத்தில். துரையப்பா, பஸ்தியாம்பிள்ளை, செட்டி போன்றவர்களை வில்லன்களாகவும், தன்னையும், சிவகுமாரனையும் முக்கிய நாயகர்களாகவும் புனைந்து நீட்டி முழங்கி முடித்திருக்கிறார்.

சிறீலங்கா அரசினது இனவாதசெயல்களானது தொடர்ச்சியாக தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்பட்டு வருவதென்பது உண்மையாயிருந்தபோதும், அவற்றை ஒன்றை இரண்டாக்கி, இரண்டை நாலாக்கி தமிழ் அரசியல் வாதிகள் மேற்கொண்ட தேர்தல் வியாபாரம் பண்ணியது ஒன்றும்

www.tamilarangam.net



பொய்யாகிவிடப் போவதில்லை. துரையப்பாவிற்கு நிகராக தன்னை தலைவனாக்கிக் கொள்ள அமிர்தலிங்கம் செய்த 'றொமான்டிக்' விளை யாட்டுக்களே தமிழாராய்ச்சி மாநாட்டில் அரங்கேறியவை. விசா இன்றி ஜனார்த்தனனை களவாக இலங்கைக்கு கூட்டிவந்து பேசவைத்து 'ஹீரோயி சம்' காட்டியதுவே மாநாட்டு வன்செயலுக்கு அடிகோலியது. இப்படுகொலைகளுக்கு அரசாங்கமும் துரையப்பாவுமே காரணம் என்றும் அவர்களாலேயே ஏதோ திட்டமிட்டு நடந்ததாகவும், புஸ்பராஜா அவர்கள் தனது புனித நூலில் கதை விடுகிறார். கூட்டணிக்காக அதுவும் தனது தலைவர் அமிர்தலிங்கத்திற்காக புகலிடத்திலும் பொய்ச் சாட்சி சொல்லி புலம்பிப் பிதற்றுகிறார்.

<u>புஸ்பராஜா தனது எழுத்தினூடாக பிதற்றியவைகள்</u>

*«மாநாட்டுக்கு உ.த.இளைஞர் பேரவையின் தலைவர் ஜனார்த்தனன் வந்த செய்தி அமிர்தலிங்கம் மூலம் அறிந்துகொண்டேன். யாழ்ப்பாணத்தில் இருந்த வீடொன்றில் ஜனார்த்தனனை சந்தித்தேன், ஜனார்த்தனனுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை சிவகுமாரனே செய்தார்.» (பக்:96)*

*«தமிழ் மாணவர் பேரவையை சேர்ந்த யாரும் ஜனார்த்தனனுக்கு பாதுகாப்பு கொடுக்கவில்லை ஜனார்த்தனனுக்கு பாதுகாப்பு கொடுத்துத்தான் அவர் யாழ்ப்பாணத்தில் உலாவ வேண்டும் என்ற நிலை அவருக்கு எந்தக் காலத்திலும் இருந்ததில்லை இனியும் இருக்கப் போவதில்லை.» (பக்:110)*

<u>'வரலாற்றின் மனிதன்' எனும் தலைப்பில் புஸ்பராஜாஅவர்களால் வெளியிடப்பட்ட அமிர்தலிங்கத்திற்கான 'பவள விழா மலரில்' ஜனார்த்தனனின் தமிழாராய்சி மாநாடு குறித்த சுய வாக்குமூலம். (பக்:114)</u>

*«யாழ்ப்பாணத்தில் நான்காம் உலகத் தமிழாராய்ச்சி மநாட்டில் 'வெளிநாட்டு அறிஞர்கள் வழியனுப்பும் கூட்டம்' செய்தித்தாள்களில் நான் உரையாற்றுவேன் என அறிவிப்பு, காலை ஊர்வலத்தை தொடக்கி வைத்து பேசியபோதே என்னை கைது செய்ய பொலிசார் முயற்சி செய்ய அவர்களிடம் அமரர் நவரட்ணம் எம்பி பேச்சுக் கொடுத்து இடைமறிக்க, நான் தலை மறைவானேன். மாலை வீரசிங்கம் மண்டபத்தில் மக்கள் வெள்ளம் நிறைந்துவிட்டதால், வெளியே அமைக்கப்பட்ட திடீர் மேடையை அடைந்தேன். காவல் துறை அதிகாரி ஒருவர், 'உம்மை கைது செய்து கொழும்பு நாலாம் மாடிக்கு அழைத்துச் செல்லும் உத்தரவு இது', எனக்காட்ட, பேசிவிட்டுத்தான் வருவேன் பேசாது இங்கிருந்துபோக தமிழ் மக்கள் அனுமதிக்கமாட்டார்கள், என நான் மறுக்க வேறுவழியின்றி கூட்டத்தை கலைத்து அங்கே ஓர் 'ஜாலியன்வாலாக்' நடத்த காவல்துறையினர் முடிவுசெய்து அகன்றனர். **அலையை கிழித்துவரும் கலம்போல் அமிர் வந்தார், கரவொலி விண்ணை பிளக்க கையிலிருந்த மாலையை எனக்கு அணிவிக்க அதை நான் திரும்ப மாலையிட அந்த மணமேடை பின்னர் பன்னிரெண்டு உயிர்களை தியாக வடிவில் காணும் அவலம் ஏற்பட்டது.»***

**«தியாக வடிவில் காணும் அவலம் ஏற்பட்டது.»**.. எனும் ஜனார்த்தனனின் த.மா.நா குறித்த வாக்குமூலமானது, அன்றைய கல வரத்திற்கு கூட்டணியினரது செயல்பாடே பிரதான காரணியாக அமைந்தது



என ஊகிப்பதொன்றும் சிரமமல்ல. ஆனால் ஜனார்த்தனது கட்டுரையை 'வரலாற்றின் மனிதன்'எனும் நூலிற்காக தானே தொகுத்து வெளியிட்டிருந்தும்கூட, அதை மறந்தோ, அல்லது அதைவிளங்கிக்கொள்ளும் தன்மையில் உள்ள குறைபாட்டின் காரணமோ!! புஸ்பராஜா அவர்கள் தனது சாட்சியத்தில் எழுதுகிறார் « ஜனார்த்தனன் அவர்கள் எந்தக்கட்டத்திலும் 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த 4வதுதமிழாராய்ச்சிமாநாட்டில் எந்த மேடையிலும் பேசவில்லை. » (ப:109) என்பதோடு அரச-பொலிஸ்படையோடு துரையப்பாவுமே அதற்கு காரணம் எனவும் பிதற்றியுள்ளார்.

மேட்டுக்குடிச் சமூக அந்தஸ்த்தை தொடர்ந்து பேணுவதற்கான வழி-முறைகளில் ஒன்றாகவே, இனவாதத்தை தமிழ் மக்கள் மத்தியில் பரப்பிய நயவஞ்சக செயலாகும். இவற்றின் தொடர்ச்சியாகவே யாழ் மேட்டுக்குடி சமூ கத்தை கல்வித் தரப்படுத்தலுக்காக சீண்டி விட்டசெயலுமாகும்.

கல்வி தரப்படுத்தப்பட்டது என்பது உண்மைதான் அது தமிழருக்கு மட்டுமானதல்ல. கல்வியில் அதிகம் வளர்ச்சியடைந்த கொழும்பு, கம்பகா, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களையும் உள்ளடக்கியதாகவே இருந்தது. ஆனால் தமிழர்கள் வாழும் பிற மாவட்டங்களான மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களில் இத் தரப்படுத்தலானது அம்மாவட்டங்களில் வாழும் மாணவர்களை பாதிக்கவில்லை என்கின்ற உண்மை தெரிந்திருந்தும், தங்கள் மேட்டுக்குடி நலன்களைக் கவனத்தில் கொண்டு யாழ்ப்பாண தமிழ் இளைஞர்களுக்கு, தரப்படுத்தலுக்கு எதிரான உணர்வை தூண்டி விட்டதோடல்லாது, இத் தரப்படுத்தலானது இலங்கை வாழ் அனைத்து தமிழ் மாணவர்களுக்குமான ஒன்றாகவும் புனையப்பட்டது. புஸ்பராஜா அவர்கள் அல்பிரட் துரையப்பாவின் கொலையை நியாயப் படுத்துவதற்கான முயற்சியையே தனது புத்தகத்தில் மேற்கொண்டுள்ளார். யாழ் நகரில் அதிகமாக வாழ்ந்தவர்கள் தலித்துகளும், முஸ்லிம்களும் மட்டுமே.

யாழ்ப்பாணத்து வாழ் தலித்துகளைப் பொறுத்தவரையில் சிறீலங்காசுதந்திரக் கட்சியா? தமிழரசுக்கட்சியா? சுயாட்சியா? என்றெல்லாம் பிரித்தறிந்து கொள்ளும் தேவை அவர்களுக்கு இருக்கவில்லை. அரசியலைப் பொறுத்த வரையில் தலித்துகள் தங்களையும் மனிதர்களாக மதிப்பதோடு தங்கள் நலன்களில் அக்கறையுள்ள அரசியல் வாதிகளையே அவர்கள் எதிர் பார்த்தவர்கள். அந்தவகையிலேயே தங்கள் நலன்களிலும் தங்களையும் மனிதர்களாக மதிக்கும் ஓர் உயர்ந்த மனிதனாக துரையப்பாவை அடையாளம் கண்டனர்.

இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் பணியாற்றியவர்களில் மதிக்கப்பட வேண்டியவர்களில் பொன் கந்தையாவிற்கு அடுத்ததாக மதிக்கப்பட வேண்டியவர் துரையப்பா ஒருவர் மட்டுமே ஆகும். இன்று வரை இவர்கள் இருவரையும் தாண்டிச் செல்லாத அரசில் சூழலே நிலவு கிறது என்பதை நாம் வரலாற்று ரீதியாக அறியமுடியும். பிற தமிழ் அரசியல் வாதிகளோடு ஒப்பிடுவோமாயின், பிரஜா உரிமைச் சட்டம் இயற்றிய வர்களுடன் கொஞ்சினார்கள், பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் கிழிக்க

www.tamilarangam.net



கண்டியாத்திரை செய்த ஜெயவர்த்தனாவுடன் குலாவினார்கள. ஆனால் விளிம்பு நிலை மக்களின் நலன்களுக்காகவும், அவர்கள் சமூக நலன்களையே பிரதான அரசியலாக மேற்கொண்டவருமான துரையப்பாவை, அமிர்தலிங்கத்தின் அரசியல் போட்டிக்காக தூவப்பட்ட விசப்பிரச்சாரத்தால் துரோகியாக்கி, விசம் ஊட்டப்பட்ட இளைஞரான பிரபாகரன் தலைமையில் துரையப்பா கொல்லப்பட்டார்.

இப்பேற்பட்ட கொடுமைக் குணங்கள் நிறைந்த கூட்டணிக் கும்பலின் கைகள் சுத்தமானவை என புஸ்பராஜா தனது நூலிலும், நூல் வெளியீட்டிலும் புகழ்ந்து கூறுகிறார். இனவாத நச்சு விதைகளைவிதைத்த கை, இன்று வரை பல்லாயிரம் உயிர்கள் பலியாகக் காரணமான அமிர்தலிங்கத்தின் கை எப்படி சுத்தமான கைகளாக இருக்கமுடியும். துரையப்பா கொலையுண்டதும் மயிலிட்டியில் உள்ள மக்கள் (நிட்சயமாக தலித்துகளாக இருக்க முடியாது) போவோர் வருவோருக்கெல்லாம் இனிப்பு வழங்கி மகிழ்வுற்றார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார். அதேநேரம் கரவூர், கொட்டடி, கற்குளம் போன்ற யாழ்நகர் பகுதிகளில் வாழ்ந்த தலித்துகள் துரையப்பாவின் கொலையினால் பாதிப்புற்று பல நாட்களாக உலை கூட வைக்கமுடியாது கண்ணீர் விட்ட வரலாற்றை யார் பதிவு செய்வர்.

சிங்கள மக்கள் பற்றி துவேசமாக பேசியது பற்றி இப்போது கலங்குவதாக. குறிப்பிடுபவர் துரைப்பாவின் கொலை பற்றியோ, கல்வி தரப்படுத்தலின் உண்மை நிலை பற்றியோ ஏன் கவலைகொள்ள மறுக்கிறார்? அமிர்தலிங்த்திற்கு துரையப்பா துரோகி என்றால் பிரபாகரனுக்கு அமிர்தலிங்கம் துரோகி என்பதும் நியாயமானது தானே!!! அமிர்தலிங்கம் கொலையை கண்டிக்கும் புஸ்பராஜா எப்போதாவது துரையப்பாவின் கொலையை கண்டித்துள்ளாரா? ஆகவே துரோகிகள் எனும் பெயரில் நிறைவேற்றப்படும் கொலைகள் அனைத்திற்கும் ஆதரவானது தானே உங்களது 'சாட்சியம்'.

புலோலி வங்கிக் கொள்ளையைப்பற்றி எனக்கு எதுவுமே தெரியாது எனக் குறிப்பிட்டுள்ளவர் அச்சம்பவ காலத்தில் இவரே சிறையிலிருந்து கொண்டு பல இயக்க வேலைகளை வழி நடத்தியதாக கூறிக்கொள்ளும் இவருக்கு இவரின் தலைமையில் இயங்கும் இயக்கம் கொள்ளையடித்தது எப்படி தெரியாமல் இருக்கமுடியும். அப்படி இருந்தாலும் கூட அச் செயலுக்கு பொறுப்பேற்கவேண்டிய தார்மீக பொறுப்பு தலைமைக்குத்தானே உண்டு.

1975ம் ஆண்டு யூன் மாதம் 6ம் திகதி தனது வீட்டில் முக்கியமானதொரு கூட்டம் நடைபெற்றதாகவும் அதில் தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் தமிழ் இளைஞர் பேரவை சேரக்கூடாது என்று முடிவெடுத்தனர் (பக்கம்148) பின்னர் 1975ல் ஆகஸ்ட் தொடக்கம் 1977 மாசி வரை சிறை சென்றிருக்கிறார், சிறை மீண்டு வந்தவுடன் 1977ல் கூட்டணிக்காக தேர்தல் பிரச்சாரம் செய்கிறார், இதற்கிடையில் எப்படி கூட்டணியினருடன் சமரசம் ஏற்பட்டது. இதனுடைய மர்மம் என்ன!!! பாராளுமன்ற பாதை மக்களின் விடுதலைக்கு சரி வராது என தீவிரவாதப் போர்வை போர்த்திக் கொண்டவர் எப்படி திடீரென கூட்டணித் தேர்தல் பிரச்சாரத்திற்கு



போகமுடிந்தது!! உங்களது கொள்கை, கோட்பாட்டின் உறுதி தொலைந்து போனதா? அல்லது கூட்டணியினரின் கொள்கை, கோட்பாட்டில் மாற்றம் ஏற்பட்டதா? அல்லது எல்லாமே பூச்சாண்டிதானா?

தோட்டக்காட்டார், கள்ளத்தோணி, வடக்கத்தையார் என்றபழிப்பு வார்த்தைகளால் இந்திய வம்சாவளியினரை கேவலப்படுத்தியவர்கள் யாழ் உயர்சாதியினரே அன்றி இவர் தனது நூலில் (பக்கம்75ம்) குறிப்பிட்டது போல் அனைத்துச் சமூகங்களும் அல்ல, குறிப்பாக தலித்துகளாலேயோ, மன்னார், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மக்களாலேயோ இந்திய வம்சாவளியினர் கேவலப்படுத்தப்பட்டவர்கள் அல்ல. ஈழப்போராட்டம் குறித்த இவரது சாட்சியமானது, சிறீலங்கா ஆட்சியாளர்களுக்கும் கூட்டணியினருக்கும் இடையிலேயான தொடர்புகள் பற்றியதாகவே அமைந்திருக்கிறது. ஆனால் இந்தத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இதுவரை இலங்கையிலுள்ள இடது சாரிகளுடன் இணைந்து செயல்பட்டவர்களல்ல. இடதுசாரிகளைக் கொண்ட கட்சிகள் ஆட்சிக்கு வரும் போதெல்லாம் உரிமைக் குரல் கொடுப்பதும் ஐக்கியதேசியக் கட்சி ஆட்சிக்கு வரும்போதெல்லாம் அவர்களுடன் இணைந்து தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பறிப்பதிலும் துணை போனவர்களாக செயல்பட்டவர்கள் இந்தக் கூட்டணியினர். தமிழையும் அரசகருமமொழியாக்குவது பற்றி கருசனை கொண்டவர்களாக இருந்தவர்கள் சமசமாஜக்கட்சியினர் மட்டுமே. கூட்டணியினர் தமிழ் மொழியின் கருசனையினால் சிங்களச் சட்டத்திற்கு எதிராக போராட்டம் நிகழ்த்தியவர்களல்ல. ஆங்கில மொழியே அரசகரும மொழியாக இருக்க வேண்டும் என்ற உள்நோக்கச் செயல்பாடே அவர்களது சிங்களச் சட்டத்திற்கெதிரான சத்தியாக்கிரகங்களும், போராட்டங்களுமாக இருந்தது. தலித்துகளுக்கு ஆதரவான செயல்பாடாக அமைந்த பாடசாலைகளை தேசிய மயமாக்குவதற்கான வாக்கெடுப்பு நிகழ்ந்த போது, பொன் கந்தையா ஒருவரைத்தவிர ஈழத்துக் காந்தி என புகழப்பட்ட செல்வநாயகம் உட்பட மற்றும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே அப்பிரேரணைக்கெதிராக வாக்களித்த புண்ணியவான்களாகும். இவ்வாறான கூட்டணியினரின் உயர் சாதி ஆதிக்கங்கள் மீதெல்லாம் புஸ்பராஜாவிற்கு விமர்சனம் இருக்கவில்லை. கூட்டணியினரும் ஆட்சிக்கு எதிராக ஆயுதம் தூக்கவில்லை என்பதாகவே கூட்டணியினர் மீதான புஸ்பராஜாவின் விமர்சனக் கொள்கை!!!.

எந்த ஒரு வரலாற்று நாயகனாக இருந்தாலும், அவர் பற்றிய ஒருமித்த கருத்துக்கும் அப்பால் அவர் மீதான எதிர்வினைகள் ஒரு போதும் இல்லையென்றாகிவிடாது. அதுபோன்றுதான் எல்லோராலும் இன்று வரலாற்று நாயகனாக்கப்பட்ட சிவகுமாரனும். இந்த எல்லோரும் என்பதில் புலிகளும், எமது புஸ்பராஜாவும் ஒருமித்து அடக்கம்.

சிவகுமாரன் தோற்றுவித்த 'வரலாறு' என்பது ஒன்றும் கேள்விக்கப்பாற்பட்டவிடயமல்ல 'முதல் ஆயுதபோராளி' 'முதல் தற்கொலைபோராளி' என்று வரிக்குவரி (பக்:126) சிவகுமாரன் குறித்த பிரமையை கட்டமைக்கும் பணியை எல்லோரையும் போலவே இன்னூலாசிரியரும் விட்டாரில்லை. இன்னும் ஒரு கட்டத்தில் (பக்:126) ஈழப்போராட்ட வரலாற்றில் புதியவரலாறு ஒன்றை தொடங்கி தனது வரலாற்றை முடித்துக் கொண்டான்

www.tamilarangam.net



எனவும் சிலாகித்து மகிழ்கிறார் புஸ்பராஜா. சிவகுமாரன் தனது வரலாற்றை முடித்துக் கொள்வதென்பது நமது கேள்விக்கப்பானதாய் இருக்கலாம். ஆனால் அவர் தொடக்கிவைத்த தற்கொலை வரலாறு என்பது என்ன? பத்து வயதுக்கப்பால் ஒன்றோ, இரண்டோ வயதுகளை தாண்டாத பாலகர்கள் உலகம்புரியா வயதில் நெஞ்சில் நஞ்சுக் குப்பிகளை சுமந்து கொண்டு தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளும் குரூர நிலைக்கு கொண்டு வந்து விட்ட வரலாறுதானே, சிவகுமாரனால் தொடக்கிவைக்கப்பட்ட வரலாறு. பாலகர்களை படுகொலைகளுக் குட்படுத்தி அதற்கு மாவீரம் என்று பட்டுக்குஞ்சம் கட்டி காட்டும் புலிகளுக்கும் அதனை தொடங்கிவைத்த சிவகுமாரனுக்கு பூ போட்டுக் கும்பிடும் புஸ்பராஜாவிற்கும் என்ன வேறுபாடு இருக்கிறது. இந்த வரலாறுமட்டும் சிவகுமாரனால் தொடங்கிவைக்கப்பட்டதல்ல. துரோகிகளுக்கு தண்டனை கொடுப்பதிலும் அவரே வரலாற்று நாயகனாக இருந்ததை தனது வர்ணனைப் புலமையினூடாக வெளிக்காட்டுகிறார்.
(பக்:101)

*«அவனது வீட்டில் வைத்து அவனை பிடித்து உரும்பிராய் சந்திவரை அடித்து இழுத்து வந்தோம் அவனது வீடு உரும்பிராய் இந்து கல்லூரிக்கு அண்மையிலிருந்தது நாங்கள் ஆயுத பாணிகளாகவே சென்றிருந்தோம். இதைக்கண்ட மக்கள் எம்மை ஏதோ கதாநாயகர்களை பார்ப்பதுபோல் பெருமையுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். உரும்பிராயே எம்மை ஆதரிப்பதுபோல் அன்றிருந்தது. »*

**புஸ்பராஜா தான் யார் என்பதை மிகத்தெளிவாக எழுத்தில்
வைத்திருக்கிறார். துரோகி, காட்டிக்கொடுப்பவன்,
சிங்கள இராணுவத்துடன்தொடர்பு, என்று எல்லோரையும் கொன்று
குவித்துவரும் இன்றைய நமது விடுதலை விரும்பிகளுக்கு
முன்னோடிகளாக இருந்தவர்கள் சிவகுமாரனும், புஸ்பராஜாவும் என்பது
ஒருபுறமிருக்க இவற்றையே தனது ஜனநாயகப் பண்பு என்றும், தானே
அராஜகத்திற்கு எதிராக குரல் கொடுப்பவன் என கொஞ்சம்கூட கூச்சமின்றி,
வெட்கமின்றி சொல்லி பெருமைப்பட்டுக் கொள்ளும் புஸ்பராஜாவிற்கும்
சபாலிங்கத்தை
துரோகியாக்கி சுட்டுக்கொன்றவர்களுக்கும் என்னதான் வேறுபாடு?**

1970 ம் ஆண்டு காலங்களில் யாழ் குடாநாட்டில் சாதித்தீ கொழுந்து விட்டு எரிகிறது, தலித்துகள் கோவிலுக்கு செல்லத்தடை, கிணற்றில் தண்ணீர் எடுக்கத்தடை, தேனீர்க் கடைகளில் பாரபட்சங்கள், பல பாடசாலைகளில் சேருவதற்கான அனுமதி மறுக்கப்பட்டமை போன்ற மனிதவிரோத நடவடிக்களின் போதெல்லாம் பார்வை அற்றுப்போன சைவ-வேளாள இயக்கங்கள்.. தமிழ் பள்ளிக் கூடங்களில் அனுமதி மறுக்கப் பட்டதன் விளைவாக, தலித்துகள் யாழ் பௌத்த பாடசாலையில் சென்று படிக்கின்ற நிலை கண்டு அஞ்சிய உயர் சாதியினர், தலித்துகளின் எழுச்சியையும், வளர்ச்சியையும் அழிக்கும் நோக்கத்தினாலேயே இந்துக்கள் மதம் மாறிவிடுவார்கள் என்ற காரணம் கற்பிக்கப்பட்டு அப்பௌத்த பாடசாலையை அழிக்கும் திட்டத்தை மேற்கொண்டனர். அதற்கு முன்நின்ற சைவவேளாள இயக்கம் தான் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கம்



(பக்கம்35) இவ்வாறான தலித் விரோத நடவடிக்கைக்கு துணை போனவர்தான் «ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்» எனும் நூலைப் புனைந்த திருவாளர் சி.புஸ்பராஜாவும் என ஒப்புக்கொண்டுவிடுகிறார்.

## *பாகம்- 2*

புஸ்பராஜாவின் «ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்» எனும் நூலின் இரண்டாவது பாகம் எனக்குத் தெரிந்த நான் இயங்கிய காலகட்டத்தில் பெரும்பாலும் நடந்த சம்பவமாகையால் அதில் உள்ள முரண்பாடுகளையும், தவறுகளையும் சுட்டிக்காட்ட வேண்டியது எனது கடமையாகிறது.

1983 நடுப்பகுதியில் நான் பிரான்சில் இயங்கிவந்த 'தமிழ்ஈழ விடுதலைப்பேரவையில்' ஓர் உறுப்பினராக இணைந்து என்னால் முடிந்தளவு பங்கினைச் செலுத்தி வந்தேன் அக்கால கட்டத்தில் இலங்கையிலும், இந்தியாவிலும் ஈழ விடுதலை இயக்கங்கள் வேகமாக வளர்ந்து கொண்டிருந்தகாலம். இதனால் நாம் மக்கள் மத்தியில் வேலை செய்யும்போது பலரிடம் இருந்து «நீங்கள் எந்த இயக்கத்திற்கு ஆதரவு» எனக்கேட்கும் நிலை உருவாகியது. நாமோ எவ்வியக்கத்திற்கும் ஆதரவு இல்லை நடு நிலமை வகிக்கிறோம் என சொல்லிப் பார்த்தோம். ஆனால் நீண்ட நாட்கள் அப்படி சொல்லிக் கொண்டு மக்கள் மத்தியில் வேலை செய்வது சுலபமாக இருக்கவில்லை. அதனால் ஏதாவதொரு இயக்கத்திற்கு சார்பெடுக்க வேண்டிய வரலாற்றுக் கட்டாயம் தோன்றியது. இந்தவகையில் தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்பன தனிநபர் பயங்கரவாத இயக்கமாகவே நிர்-வாகத்திற்குள் பேசப்பட்டது. இதனால் இந்த இரண்டு இயக்கம் தவிர்ந்த மற்றய இயக்கங்களின் நிலைப்பாடுகள் பற்றி நிர்வாகத்தால் ஆராயப் பட்டது. தமிழீழ விடுதலைப் பேரவையானது எப்போதும் இடதுசாரிக் கருத்துகளுடன் செயற்பட்டு வந்ததால் EROS,EPRLF ஆகிய இயக்கங்கள் மீது ஒரு மரியாதையும், கருத்து ரீதயான உடன்பாடும் அதிகமிருந்தது. அந்த அடிப்படையிலேயே EPRLFஇன் வேலைத்திட்டங்கள் அனைத்தும் நிர்வாகத்திலுள்ள பெரும்பாலோருக்கு உடன்பாடாக இருந்தமையால் இறுதியாக EPRLFக்கு சார்பெடுப்பது என தீர்மானிக்கப்பட்டது, «நாளடைவில் பேரவையில் இருந்தவர்களுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ்.வைச் சேர்ந்தவர்களும் ஆளுமையுள்ளவர்கள் என்பதால் நடைமுறை வேலைகளில் சிக்கல்கள் ஏற்பட்டன. ஆளுக்கு ஆள் நீ பெரிய ஆளா நான் பெரிய ஆளா என்ற பனிப்போரிலேயே காலம் வீணாகியதுடன் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட்டன» எனும் புஸ்பராஜாவின் கூற்று (பக்கம்382) மிகத்தவறானது. பனிப்போர் எதுவும் எமக்குள் நடந்ததில்லை. வேலை செய்கிறபோது ஏற்படும் தவறுகள் பற்றி ஒவ்வொரு சந்திப்பின் போதும் விமர்சனத்திற்கு விடப்பட்டு வேலைகள் செழுமைப்படுத்தப்பட்டன. «கலாமோகன், எஸ்.கே.ராஜன் ஆகியோர் ஈ.பி.ஆர்.எல்.எவ். இனரின் துணையுடன் அகதி அந்தஸ்து பெற்றவுடன் இடத்தைக் காலி பண்ணிக் கொண்டனர்.» (பக்கம்384) இதுவும் புஸ்பராஜா வால் எழுதப்பட்ட உண்மைக்குப் புறம்பான தகவலாகும். கலாமோகன் பத்திரிகை எழுத்தாளராக இருந்தவர் இவருக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் சிபாரிசின் பெயரில்தான் அகதி அந்தஸ்து கிடைக்க

www.tamilarangam.net



வேண்டும் என்பதல்ல. எஸ்.கே. ராஜன் கருத்தியல் ரீதியாக இயக்கத்துள் வராது விட்டாலும் தன்னால் ஆனதை செய்ய வேண்டும் என்ற வேகம் அவரிடம் இருந்தது. கொடுத்த வேலையை முடித்துவிட்டே அடுத்த காரியத்தில் இறங்கும் பொறுப்பு அவரிடம் இருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்.இன் காரியாலம் மூடப்பட்டு பொறுப்பாளர் உட்பட பலர் தொலைந்து போன நிலையில் கூட அடுத்து என்ன செய்யலாம் என்று யோசனை செய்து கொண்டிருந்த நான், பாலகிருஸ்ணன் போன்றவர்களில் எஸ்.கே.ராஜனும் ஒருவர். ஆகவே கலாமோகன், எஸ்.கே.ராஜன் போன்றோர் அகதி அந்தஸ்து கிடைத்தவுடன் இடத்தை காலி பண்ணி விட்டார்கள் என்பது அவர்களையும், அவர்கள் செய்த வேலைகளையும் கொச்சைப் படுத்துவதாகவே அமைகிறது.

இன்னுமொரு சுவையான விடயத்தையும் பதிவு செய்திருக்கிறார் புஸ்பராஜா. «அதீத ஜனநாயக நோய் பிடித்து ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் பிரான்சுக் கிளை துன்பப்பட்டது» (ப.386) என. ஒவ்வொரு இயக்கத்தில் இருந்து வெளியேறுபவர்கள் அல்லது வெளியேற முடியாது கொல்லப்பட்டவர்கள் என எத்தனை ஆயிரம் போராளிகளின் வரலாற்றை நாம் அறிந்திருக்கிறோம். இவர்களுள் தப்பி வந்த மாற்று இயக்கப் போராளிகளே ஏற்றுக்கொண்ட விடயம். ஈ.பி.ஆர்.எல்.எவ். ஓர் ஜனநாயக அமைப்பு என்பது. நான் ஈ.பி.ஆர்.எல்.எவ். இல் இணைவதற்கு முக்கியகாரணங்களில் அதுவும் ஒன்றாகவே இருந்தது.

இந்தியாவிற்கு «நந்தன் வானொலிப் பாகங்களைக் கொண்டு போகும் போது அளவுக்கு அதிகமாக தங்கம் கடத்தினார்.» (பக்கம்386) என நந்தன் மீது இவரால் குற்றம் சாட்டப்பட்டு கொமிட்டியில் விமர்சனத்திற்குட் படுத்தப்பட்டபோது கொமிட்டியின் பூரண ஒத்துழைப்பு புஸ்பராஜாவிற்கு கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை. காரணம் இயக்கத்தில் நந்தன் சேரும்போதே அவரின் தொழில்கள் பற்றி தெரிந்து கொண்டே அவரை இயக்கத்தில் இணைத்து, பொருளாளர் பொறுப்பையும் கொடுத்தனர். அத்துடன் கட்சிக்கு தேவையான பொருட்களை இந்தியாவிற்கு எடுத்துச்செல்லும் போது அப்பயணத்திற்கான செலவில் ஒரு பகுதியையும் தானே பொறுப்பேற்றுக் கொண்டார். தனது செலவிற்காகவே சங்கிலி ஒன்றை கொண்டுசென்றதாக நந்தன் கொமிட்டியில் ஒப்புக் கொண்டவர். இதில் என்ன சூத்திரம் இருக்கிறதென்றால், இந்தக் குற்றச்சாட்டு பெரிதாக்கப் பட்டமைக்கு காரணம் தனிப்பட்ட நந்தன் மேல் புஸ்பராஜாவிற்கு இருந்த விருப்பு வெறுப்பே ஒரு சங்கிலியை தங்கக்கட்டிளாக புனைந்ததற்கு காரணம். தனிப்பட்ட நந்தன் பவுண் கொண்டுசென்றதை குற்றமென்று சொன்னால்; குட்டிமணி கள்ளக்கடத்தல் செய்தது சமூகசேவையா? குட்டிமணி செய்ததை சட்டவிரோதமானதாக இவர் கருதவில்லையாம்!!! அது புஸ்பராஜாவிற்கு வாணிபமாம்!!! நந்தன் செய்தது கள்ளக் கடத்தல்!!! இது என்ன நியாயம்...!!!

பாலகிருஸ்ணனுக்கும், உமாகாந்தனுக்கும் இடையில் நிழல் யுத்தம் நடந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அவர்களுக்குள் எந்த யுத்தமும் நடக்கவில்லை அவர்கள் இருவருடைய பொறுப்புகளும் வேறு வேறானவை.



ஒருவருடையதை மற்றவர் பறிக்க முடியாது, உமாகாந்தன் நிர்வாகம் நடத்த முடியாது. பாலகிருஸ்ணன் புத்தகம் எழுத முடியாது, அவர்களுக்கிடையே நிழல் யுத்தம் என்பதெல்லாம் வெறும் கற்பனையே.

ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் பிரான்ஸ் கிளையின் மத்தியகுழு வெறும் 'றபர்ஸ்டாம்' இயக்கமாக எப்போதும் இருந்ததில்லை. அனைத்து முடிவுகளும் கொமிட்டியால் அலசப்பட்டு ஆய்விற்குட்படுத்திய பின்பே ஒவ்வொன்றும் செயல்வடிவம் பெறும் சூழலே இருந்தது. இலங்கை-இந்திய ஒப்பந்த காலத்தின் போது புஸ்பராஜா, உமாகாந்தன், ஜெயராஜா ஆகியோர் இலங்கை சென்றனர் என்பது உண்மையே இவர்கள் செல்லும் போது பிரான்சில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயங்கியதா? அப்படி இயங்கியிருந்த தாயின் இவர்கள் செல்வதற்கான ஒப்புதல் பெறப்பட்டதா? சென்று வந்தபின்னர் இயக்க உறுப்பினர்களிடம் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் தவறுகளை புஸ்பராஜா விமர்சித்தவரா? யார்முன் எப்போது விமர்சனம் வைத்தார்? மாறாக இன்னும்சிலகாலம் இப்படியே இலங்கையின் அரசியல் சூழல் நீடிக்குமாயின் எவரும் ஒன்றும் செய்ய முடியாது!! ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகா ஓகோ என்று வளர்ந்துவிடுவம்!! என்பதான புகழாரமே புஸ்பராஜாவால் சூடப்பட்டது. இவர் தனது நலன்களின் அடிப்படையில், தன்னிச்சையாக சில முடிவுகளை எடுப்பதன் தொடர்ச்சியாகவே இவர் பொறுப்பாளராக தொடர்வதை விரும்பாத பெரும்பான்மையான உறுப்பினர்கள் வேறொருவரை பொறுப்பாளராக நியமிக்கும்படி கட்சியின் மத்திய குழுவிடம் வேண்டுகொள் விடுத்தனர்.

1986ம் ஆண்டு தொடக்கம் 1991ம் ஆண்டுவரை தனது வாழ்க்கையின் பெரும்பாலான காலத்தை விமானத்திலேயே கழித்தேன் என தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். எனக்கு தெரிந்தவரை புஸ்பராஜாவின் தந்தையான சிதம்பரி ஐயா விமானங்களுக்கு சொந்தக் காராக இருந்ததில்லை. புஸ்பராஜாவும் விமான ஓட்டியாக இருந்ததும் இல்லை அப்படி இருக்க அகதியாக பிரான்சில் தஞ்சம் புகுந்த இவர், பல காலங்களாக விமானத்தில் பறந்து திரிந்ததற்கான காரணம் என்ன..?

நாம் இவர்மீது வைத்த விமர்சனங்களில் இவரின் தொடர்ச்சியான விமானப் பிரயாணங்களும் ஒன்றாகவே இருந்தது. அதற்கான விளக்கமளிக்குமாறு கேட்கப்பட்ட போது இவர் கூட்டங்களுக்கு சமூக மளிக்காது இருந்தார். பின்பு கட்சியின் தலைமை சுரேஸ் பிரேமச்சந்தினிடம் மாற்றப்பட்டு அவர் பிரான்ஸ் வந்தபோதும் இவரிடம் பல விளக்கங்கள் கேட்கப்பட்ட போது அதற்கும் சரியான பதில்களை கொடுக்க முடியாத-வராகவே புஸ்பராஜா இருந்தார். நாம் ஏகமனதாகவே லோகராஜாவை பிரான்சின் பொறுப்பராளராக தெரிவு செய்து அது 1993ல் இந்தியாவில் நடைபெற்ற இரண்டாவது காங்கிரசில் ஒப்புதல் பெறப்பட்டது. என்பதே பிரான்சில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் பொறுப்பாளர் மாற்றப்பட்ட வரலாறாகும்.

உமாகாந்தன் இலங்கை இந்திய ஒப்பந்த காலத்தில் இலங்கை சென்று திரும்பி இருந்தாலும் அக்கால கட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்.ஆல் மேற்கொள்ளப்பட்ட தவறான நடவடிக்கைகள், செயற்பாடுகள் பற்றிய விமர்சனம் அடங்கிய நிண்ட கட்டுரை ஒன்றை நடைபெற்ற இரண்டாவது

www.tamilarangam.net



காங்கிரசிற்கு அனுப்பியிருந்தார். அதில் அடிக்குறிப்பாக கட்சியின் பிரான்ஸ் பிரிவின் பொறுப்பாளர் பதவியை லோகராஜா விடம் ஒப்படைப்பதற்கான சிபாரிசும் அடங்கியிருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரான்சில் கடுமையாக வேலைசெய்த காலகட்டத்தில் ஜெயராஜா, தியாகநாதன் போன்றோர் நன்றாக செயற்பட்டதாக அடிக்கடி தனது நூலில் கூறுகிறார். மற்றவர்களை ஏதோவொரு வகையில் கொச்சைப் படுத்துவதையே நோக்கமாக கொண்டுள்ளார். காரணம் மேற்கூறப் பட்ட இருவரையும் தவிர மற்றையோர் இவர் பிரான்சுக் கிளையின் பொறுப்பாளர் பதவியில் நீடிப்பதை விரும்பாததே ஆகும். இவரால் கொச்சைப் படுத்தப்பட்டவாகள் இன்றும் ஏதாவதோர் அமைப் புடனோ, இலக்கிய ஈடுபாட்டுடனோ தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் மேற்படி புஸ்பராஜாவால் புகழ்ந்துரைக்கப் பட்டவர்கள் இன்று என்ன ஆனார்கள் என்ன செய்கிறார்கள். இவர்களது சமூக அக்கறை எங்கே ஓடி ஒழிந்துகொண்டது, என்பது யாருக்கும் தெரியாத மர்மமாகவே உள்ளது.

இவர் தனது சாட்சியத்தில் கம்யூனிசத்தைப்பற்றி எழுதுகிறபோது கம்யூனிசம் பற்றியும் அதை தத்துவமாக ஏற்றுக்கொண்டு, போராட்ட வடிவத்தை உருவாக்கி மக்கள் மத்தியில் செயல்படுத்திய அனைத்தையும் கிண்டலும், கேலியுமாகவே புனைகிறார். ஒடுக்கப்பட்ட மக்கள் நலன் களிற்கான சமூக-அரசியல்-பொருளாதார கோட்பாடே கம்யூனிச செயல் பாடாகும். அந்தவகையிலேயே சிங்கள இடதுசாரிகள் யாழ்ப்பாண தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பொருளாதார ரீதியாகவும், ஒடுக்கப்பட்ட தலித்மக்கள் மத்தியிலும் தங்களது வேலைத்திட்ங்களின் ஊடாக தலித்மக்களின் விடுதலைக்கு உறுதுணையாக இருந்தனர் என்னும் வரலாற்றை யாரும் மறந்துவிடவோ மறைத்துவிடவோ முடியாது. ஆனால் திரு.புஸ்பராஜா அவர்கள் தான் ஒரு தலித்தாக இருந்தும், இடதுசாரிகள் தலித்துகளுக்காக போராடிய சம்பவங்களை கண்களால் பார்த்தும்கூட அவர்களுடன் இணைந்து போராட முடியாது விட்டாலும் இவர் காலத்தில் தலித்துகளுக்கான உரிமைப் போராட்டங்கள் நடந்தும்கூட அதைக் கண்டுகொள்ளாததோடு அப்போராட்டத்தையும், அதற்கான முன்னோடி களையும் கொச்சைப் படுத்தும்வகையில் விமர்சித்திருப்பதானது கூட்டணி-பால் குடித்து வளர்ந்த வளர்ப்பின் விளைவே!!!

தமிழர் விடுதலைக்கூட்டணியினரதும் அதனது உயர்சாதி மேட்டுக்குடிச் சிந்தனையின் உணர்ச்சி வெளிப்பாட்டின் காரணமாகவே இத்தனை இலட்சம் தமிழ் மக்களின் அழிவுகளுக்கும் காரணமெனும் உண்மை வெளிவரும் காலகட்டத்தில்; «ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்» எனும் நூலினூடாக அதை நான் செய்தேன், இதைநான் செய்தேன், நான் முடிவெடுத்தேன், என நான்……நான்……என எழுதியதன் மூலமாக கூட்டணிக் கும்பல் செய்த கொடுமைகளுக்கு தனது பங்கையும் ஒப்புக்கொண்டிருப்பதே இவரது நூலின் சிறப்பம்சமாகும்.

◆



**திரு புஸ்பராஜாவினது « ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம் » எனும் நூல் பேசுகின்ற...**

**தமிழ்த் தேசிய - பெருங்கதையாடலுக்காக சன்னதமாடி பலிகொடுக்கும் ஆரமப்பகாலகட்டத்தில் வாழ்ந்தவர் எமது தலித் இலக்கிய முன்னோடியான கே.டானியல்.**

**தமிழ்த் தேசியம், தீவிரவாதம், தலித் விடுதலை போன்றவை குறித்து அவர் கொண்டிருந்த பார்வைகளை தனக்கு நெருக்கமானவர்களுடன் மட்டும், அதுவும் இலங்கைக்கு வெளியே பகிர்ந்து கொண்டிருக்கிறார்.**

**தமிழ்நாட்டில் அவரது தோழர்களான அ.மார்க்ஸ், வேல்சாமி, மணியரசன், வைகறை போன்றவர்களுடன் தனிப்பட்ட உறவுகளுக்கும் அப்பால்; தலித் சமூகங்களுக்கான இலக்கியப் படைப்பாக்கம் குறித்து கடிதம் மூலமாக உரையாடிக் கொண்ட விபரங்களை « கே.டானியல் கடிதங்கள் » எனும் தலைப்பில் நூல்வடிவமாய், அ.மார்க்ஸால் தொகுத்து வெளிவந்துள்ளது.**

www.tamilarangam.net







<u>பிரான்சில்</u>

தலித் சமூக அக்கறை
வட்டத்தினரால்
வெகுவிரைவில் கே.டானியல்
கடிதங்கள் பற்றிய விமர்சனக்
கலந்துரையாடல்
(assura@microsoft.com)
(ddurai@aol.com)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பணச்சடங்கு விழா

## புத்தக வெளியீட்டு விழா அழைப்பிதழ்

திருமதி செல்வி. திரு [redacted] அவர்களுக்கு,

அன்புடையீர்!

நீண்ட வருட முயற்சியாக என்னால் எழுதப்பட்ட "ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்" என்னும் 632 பக்கங்கள் கொண்ட வரலாற்று நூலை வரும் பெப்ரவரி மாதம் 15ம் திகதி **(15.02.2004)** பிற்பகல் 3மணிக்கு வெளியிட்டுவைக்க விரும்பியுள்ளேன்.

அந்த வேளையில் நீங்கள் உங்கள் குடும்பத்துடன் வருகை தந்து
எனது நூல் வெளியீட்டு விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றேன்

நன்றி

விழா நிகழ்வு மண்டபம்

**Salle Rencontre**
rue Jean François Chalgrin
95140 Garges les Gonesse

தங்கள் நல்வரவை விரும்பும்

**சி. புஸ்பராஜா**
*7, rue Racine - 95140 Garges les Gonesse - France*
தொலைபேசி : *01 39 86 31 30 / 06 03 70 97 43*